சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்

இலக்கிய மாத இதழ். 2

சரஸ்வதீ

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

மலர் 2–இதழ் 6]   ஜூன் 1956   [துன்முகி–வைகாசி

பௌத்தத்தின் செல்வாக்கால் இந்தியக் கலை மட்டும் செழுமை யடையவில்லை; ஆசியக் கலையே மறுமலர்ச்சி யடைந்தது. மேலேயுள்ள பத்மபாணி சிலை திபெத் நாட்டைச் சேர்ந்தது.

இந்தியாவில் பௌத்தக் கலை

★

டி. என். ராமச்சந்திரன்

★

புத்தரது சிஷ்யர்கள் நாடு முழுதும் சுற்றிப் பிரசாரம் செய்துவந்தனர். அவர்கள் குகைகளிலும், பாறைகளில் குடைந்தெடுத்த மண்டபங்களிலும் தங்கினார்கள். அவர்கள் தங்கிய இடங்களில் மடங்கள், குகைக்கோவில்கள், ஸ்தூபிகள் முதலியவை தோன்றின. பம்பாய் ராஜ்யத்தில், கார்லே, கன்ஹேரி, பாஜா ஆகிய ஸ்தலங்களும் தக்ஷிணத்தில் அஜாந்தாவும் தோன்றின. மத்திய இந்தியாவில் சாஞ்சியிலும், தென்னிந்தியாவில் அமராவதி, நாகார்ஜுனகொண்டா ஆகிய இடங்களிலும் பிரம்மாண்டமான ஸ்தூபிகளும் சைத்தியங்களும் எழுந்தன. இவைகளில் புத்தரின் பெருமையைக் காட்டும் விதத்தில், அவரது வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்கள் எழிலோவியங்களாகத் தீட்டப்பட்டன; புத்தபெருமானின் முற்பிறப்புக்களை விளக்கும் ஜாதகக் கதைகளில் வரும் சம்பவங்களை சித்திரங்களாகத் தீட்டினர்.

புத்தர், அவர் அருளிய தர்மோபதேசங்கள், பௌத்த சங்கம் மூன்றும் பௌத்தர்களுக்கு வணக்கத்துக்குரியன. சுருக்கமாக இவற்றைத் 'திரி ரத்தினங்கள்' என்று கூறுவர். திரி ரத்தினங்களை விளக்கும் வகையில் நாடெங்கும் ஸ்தூபிகள் கட்டப்பட்டன.

ராஜகிருஹம், வைசாலி, கபிலவஸ்து, அல்லகப்பா, ராமகிராம, வேததீப, பவா, குஸிநாரா ஆகிய எட்டு இடங்களில் உள்ள ஸ்தூபிகள் மிகவும் விசேஷமானவை; இவை தவிர, துரோண என்னும் பிராமணரும், பிப்பில வனத்திலிருந்த மௌரியரும் ஸ்தூபிகள் எழுப்பினார்கள்.

புத்தர் தம் அடிச்சுவடுகளைப் பதித்துச் சென்ற ஸ்தலங்கள் பற்றியும் நாம் கேள்விப்படுகிறோம். அந்த இடங்களில் எல்லாம் பலவிதமான ஞாபகச் சின்னங்கள் எழுப்பப்பட்டு அவை வழிபடப்பட்டு வருகின்றன.

கிருஸ்து பிறப்பதற்கு முன்னும் அவர் பிறந்ததற்குப் பின்னும் உள்ள மூன்று நூற்றாண்டுகளில் இந்தியாவில் பௌத்தம் வெகு தீவிரமாகப் பரவி வளர்ந்தது. வடமேற்கில் கிரேக்க,

ரோம கலாசாரத் தொடர்பால் ஒரு கலப்பு - ரூபக் கலை உதயமாயிற்று. காந்தாரக் கலை என்று அது குறிப்பிடப்படுகிறது. காலப் போக்கில் புத்தர் போதனைக ளுடன் அந்தந்தப் பிரதேச மக்க ளின் பல கோட்பாடுகளும் கருத் துக்களும், மந்திர தந்திரங் களும் கலந்துவிட்டன ; தந்திர பௌத்தம் உருவாகியது. அதன் நிலைக்கும் ஹிந்து மதத்தின் நிலைக்கும் அதிக வித்தியாச மில்லை என்று சொல்லலாம்.

புத்த மதத்தின் செல்வாக் கால், இந்தியாவில் படித்தவ னுக்கும் பாமரனுக்கும் பிணைப்பு ஏற்பட்டது. இதன் பலனாக, சிற்பக்கலை செழித்துவளர்ந்தது. போப்பாலுக்கு அருகில் உள்ள சாஞ்சி ஸ்தூபிகளிலும் மத்திய இந்தியாவில் உள்ள பர்ஹுத், குண்டூர் ஜில்லாவில் உள்ள அமராவதி, நாகார்ஜுன கொண்டா ஆகிய இடங்களில் உள்ள சின்னங்களிலும் அத்த கைய சிற்பங்களைக் காணலாம். கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் தான் புத்தருக்குச் சிலைகள் தோன்றின. வெண்கலத்திலும் கல்லிலும் சிலைகள் வடித்தனர். அக்காலத்திய வெண்கல புத்தர் சிலைகள் சில, இப்பொழுது அம ராவதியிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கண்டெடுக்கப்பட் டுள்ளன. கி. பி. 2-ம் நூற்றுண் டுக்குப் பிறகு புத்தர் சிலைகள் பிரபலமாகிவிட்டன.

வட இந்தியாவில் மதுரா வில் கி. பி. முதல் நூற்றுண் டில் சிற்பக்கலை பல ரூபங் களில் வளர்ந்தது. மத சம்பந்த மான சிலைகள் மட்டுமல்லாமல் அழகான பெண்களையும் ஜீவ ராசிகளையும், மரஞ் செடி கொடி களையும் சிற்பங்களில் செதுக்கி னர்.

மதுராவில் உதயமான கலைப் பிரிவு கி. பி. 4-வது. 5-வது நூற் ருண்டுகளில் குப்தர் ஆட்சிக் காலத்தில் உன்னத, பரிபூரண நிலையை அடைந்தது. இந்தி யக் கலைக்கு அதுதான் பொற் காலம் என்று கூறலாம். சிலை உருவங்களில் ஒருவிதத் தன் னடக்கமும், ஆத்மீக உணர்ச்சி வெளிப்பாடும் காணப்பட்டன. மதுரா, சாரநாத், அஜாந்தா, பீகார் ஆகிய இடங்களில் உள்ள மகோன்னதமான புத்தர் சிலை கள் அந்தப் பொற்காலத்தின் அழியாச் சின்னங்களாகும். அவைகளில் முகங்களில் தெய் வீகக் களை பொலிவுற்று நிற் கிறது ; கீழ்நோக்கிய பார்வை யும், புன்னகை தவழும் இதழ் களும் புத்தரின் தெய்வீகக் கரு ணையை நன்கு எடுத்துக்காட்டு கின்றன.

குப்தர் காலத்திய வெண்கலச் சிலைகளும், சிற்பங்களையும் ஓவி யங்களையும் போலவே மிகச் சிறந்து விளங்குகின்றன. கி. பி. 5-வது நூற்றுண்டுக்குப் பிறகு உலோக பிம்பங்கள் மிகவும் பிர பலமடைந்துவிட்டன.

கிழக்கத்தியக் கலைப் பிரிவு

தாரநாதாவின் கிழக்கிந்தியக்

கலைப்பிரிவு பாலர் கலைப் பிரிவு என்று கூறப்படும். நலாந்தாவில் அதன் சிறப்பைக் காணலாம். அங்கே வழுவழுப்பான கறுப்பு ஸ்லேட் விக்கிரகம் பிரபலமாயிருந்தது. வெண்கலச் சிலைகளும் ஏராளமாகக் கிடைத்தன. 9-வது நூற்றுண்டில் நலாந்தாவுக்கும் சுமாத்ரா, ஜாவா ஆகிய இடங்களுக்கும் இடையே இருந்த நெருங்கிய உறவைக் கவனித்தால், நலாந்தா கலைப்பிரிவு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெரியவரும். கி. பி. சுமார் 860ம் ஆண்டில் சுமத்திராவைச் சேர்ந்த (ஸ்வர்ணதீபம்) பாலபுத்திரா நலாந்தாவில் ஒரு பெரிய மடத்தை நிறுவினர். நேப்பாளத்துக்கும் பர்மாவுக்கும் கூட நலாந்தாவுடன் தொடர்பு இருந்தது. பாலா, சேனு மன்னர்கள் காலத்தில் பீகாரும் வங்காளமும் குப்தர் காலத்திய பாணியைப் பின்பற்றிக் கலையை வளர்த்தன.

தஞ்சாவூர் ஜில்லாவில்

தென்னிந்தியாவில் புத்தர் விக்கிரகங்கள் அதிகமாகக் கிடைக்கவில்லை யாயினும், தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு சில கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை கி. பி. 10-வது நூற்றுண்டிலிருந்து 15-வது நூற்றுண்டுக்குள் செய்யப்பட்டவை. முதலாம் ராஜராஜன், ராஜேந்திரன், ஆகியவர்கள் காலத்தில் சுமாத்திராவைச் சேர்ந்த சைவேந்திர மன்னர்கள் நாகப்பட்டினத்தில் பௌத்த விஹாரங்களைக் கட்டினர்கள். சமீப காலத்தில் சுமார் 850 வெண்கலச் சிலைகள் அங்கிருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. அவை மஹாயான பௌத்த மார்க்கப்படி உள்ளவை.

தென்கிழக்காசியாவில்

பர்மா, தாய்லாந்து, மலேயா, சுமாத்திரா, ஜாவா, இந்தோ-சீனு, ஆகிய நாடுகளில் பௌத்தமும் பௌத்தக் கலையும் பரவியிருந்தன. அமராவதி கலைப் பிரிவு இலங்கை, சயாம், சுமாத்திரா ஆகிய இடங்களில் பரவியிருந்தது. சுமாத்திராவில் ஓரளவுக்கு அது பரவியதாகக் கூறலாம். பர்மாவும், சயாமும் இன்றுவரை பௌத்த நாடுகளாகவே இருக்கின்றன. தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே மதமும் கலாசாரமும் பிணைப்புச் சங்கிலிகளாக இருந்தன. தென்னிந்தியாவில் பல்லவர் ஆட்சி ஓங்கி நின்ற காலத்தில் கலை செழித்து வளர்ந்ததுடன் தென்கிழக்காசிய நாடுகளிலும் அதுபரவியது.

கி. பி. 11-ம் நூற்றுண்டில் வங்காள-பீகார் மன்னர்களான பாலர்கள் காலத்தில்தான், கடைசியாக, இந்தியக் கலை தென்கிழக்காசியாவில் வியாபித்தது. பர்மாவின் அரசர்கள் புத்தகயா, நலாந்தா ஆகியவைகளுடன் தொடர்புகொண்டார்கள். அதன்மூலம் ஸ்தாவிரவாத மார்க்கத்தைச் சேர்ந்த புத்தர்

புத்தர் ஞானேதயம் அடைந்ததும் நடத்திய முதல் உபதேசம். காத்தார சிற்பம்.

சிலை ஒன்றும் உருவெடுத்தது. சயாமியிலும்அதே ரூபச் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டன. பிறகு, இலங்கை, தென்னிந்தியா ஆகியவைகளின் செல்வாக்கினுல் சயாமில் புதிய புத்தர் சிலை உருவாயிற்று.

கிழக்கிந்தியாவிலும் மேற்கிந்தியாவிலும் மத்திய காலத்தில் ஏராளமான கையெழுத்துச் சுவடிகள் எழுதப்பட்டன. அச்சுவடிகளில் புத்தமார்க்கத்தை விளக்கும் சிறிய சித்திரங்களை வரையும் பழக்கமும் ஏற்பட்டது. பாலர் காலத்திய கிழக்கிந்திய சித்திரங்களில் பௌத்த மத தேவதைகள் உருவங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. "பிரஞ்ஞாபரிமிதா" என்னும் நூலிலும் 12-வது நூற்றுண்டு முதல் 14-வது நூற்றுண்டு வரையுள்ள நூல்களிலும் சிறந்த சித்திரங்கள் காணப்படுகின்றன. ★

காலம் மாறிப் போச்சு

●

பட விமர்சனம்

●

சாரதி சித்திரமான "காலம் மாறிப் போச்சு" என்னும் படத்தைபற்றி, தமிழகத்திலுள்ள எல்லாப் பத்திரிகைகளும் ஒருங்கே பாராட்டியுள்ளன.

"பிரமாதம், "அபூர்வமான படம்" "எல்லோரும் அவசியம் பார்க்க வேண்டிய படம்", "கலையும் கருத்தும் இணைந்த இமாலய வெற்றி" "காலத்திற்கேற்ற உன்னத திரைப்படம்" என்றெல்லாம் புகழுரைகளை அள்ளி வீசியுள்ளன.

இந்தப் போற்றுதல்களுக்கு மிகவும் உரித்தான படம் "காலம் மாறிப் போச்சு" என்பதில் ஐயமில்லை. அதுமட்டுமன்று. இந்தப் படம் திரை உலகில் ஒரு புரட்சியைத் தோற்றுவித்திருக்கிறது என்றும் நான் கருதுகிறேன். இப்படம் திரையிடப் பெற்ற 1956 மே 4-ம் தேதியிலிருந்து தமிழ்பட உலகில் ஒரு புது யுகம் தோன்றுகிறது எனவும் நாம் உறுதியாகக் கொள்ளலாம்.

தமிழ்ப் பேசும் படம் பிறந்து 25 ஆண்டுகள் கழிந்துவிட்டன! வெள்ளி விழாக் கொண்டாட்டம் நிகழ்ந்துவிட்டது! இந்த 25 ஆண்டுகளில் சுமார் 500 தமிழ்ப் படங்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்த 500 படங்களிலும் தலைசிறந்தது 'காலம் மாறிப் போச்சு' என்பது என் கருத்து. கதையமைப்பிலும் கருத்திலும், கலையம்சத்திலும் இதுபோன்ற படம் இதுவரை வெளிவந்ததில்லை. திரை உலகில் ஒரு புரட்சி நிகழ்ந்துவிட்டது!

சிறந்த அம்சங்கள்

"காலம் மாறிப் போச்சு" வெளி வருவதற்கு நாலைந்து ஆண்டுகளுக்கு முன் "ஏழை உழவன்" என்னும் படம்வந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அதில் உழவனுடைய வாழ்க்கை எங்ஙனம் சித்திரிக்கப் பெற்றிருந்தது? உழவன் முதுகெலும்பு அற்றவனாகவும், நடைப்பிணமாகவும் காட்சியளித்தான். உழவன் மகன் நிலப்பிரபுவின் மகளைக் காதலிக்கிறான். இறுதியில் கல்யாணமும் செய்துகொள்கிறான்; உழவனுடைய பொருளாதார அவலநிலையோ, சமுதாய சீர்கேடு

களோ, நிலப்பிரபுவின் சுரண்டல் முறைகளோ காரண காரியத்தோடு, படிப்படியாக, முழுமையாகக் காட்டப்பெறவில்லை. உழவனுடைய உண்மை வாழ்வு திரித்து மறைக்கப்பட்டிருந்தது.

"காலம் மாறிப் போச்சு" உழவனுடைய யதார்த்த வாழ்வை, யதார்த்தச் சூழ்நிலையில், கலை அழகோடு சித்திரிக்கிறது. ஒரு நிலச்சுவான், அவனுக்குச் சேவகம் செய்யும் கர்ணம், நிலச்சுவானின் அடியாட்கள், சுரண்டல் முறைகள் ஆகியவற்றை ஒரு பக்கத்திலும்; ஒரு விவசாயி, அவனது குடும்ப வாழ்வையும் அதிலுள்ள ஏற்ற இறக்கங்கள், கிராம விவசாயிகள் மனோபாவம், விவசாயிகள் ஒற்றுமை, விவசாயிகளின் போராட்டம் ஆகியவற்றை மறுபுறத்திலும் படம் பிடித்துக் காட்டி, இறுதி வெற்றி உழவர்களுக்கே என்பதையும் பசுமரத்து ஆணி போல் நம் மனதில் பதிய வைக்கிறது.

திரைக் கதையை ஆந்திர முற்போக்கு எழுத்தாளர்களான கே. எல். நாராயணாவும், தாபி சாணக்யாவும், ஸி. வி. ஆர். பிரசாத்தும் வெகு அருமையாக எழுதியிருக்கின்றனர். வசனம், பாடல்களை தமிழ்நாட்டு முற்போக்கு எழுத்தாளரான முகவை இராஜமாணிக்கம் எளிய முறையில், நயம்பட எழுதியுள்ளார்.

ஆந்திர, தமிழ்நாட்டு நடிகர்களான அஞ்சலி தேவி, கிரிஜா, எஸ். வி. சுப்பையா, ஆர். கணேஷ், பாலையா, துரைராஜ், தங்கவேலு, டி.கே. பாலசந்திரன் ஆகியோர் திறம்பட நடித்துள்ளனர். குறிப்பாக, எஸ்.வி. சுப்பையாவின் நடிப்பு உலகப் புகழுக்கு உரித்தாகும்.

சுருக்கமாகச் சொன்னால், ஆந்திர - தமிழ்நாட்டு முற்போக்குக் கலைஞர்களின் கூட்டு உழைப்புத்தான் இந்தப் படத்திற்கு அபரிமிதமான வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது. டைரக்டர் தாபி சாணக்யாவும், வசனகர்த்தா முகவையும் நடிகமணி எஸ்.வி. சுப்பையாவும் இப் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்றாலும், பிற நடிகர்கள், டெக்னீஷியன்கள் ஆகியோருடைய பங்கையும், திறமையையும் நாம் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

இப்படத்தில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் கதையின் கருத்தை மனத்தில் வாங்கி, லட்சிய வேகத்தோடு தம் கடமையை ஆற்றியிருக்கிறார்கள் என்று கூறவேண்டும். அதனால்தான் புதுயுகத்தின் விடிவெள்ளியாக இப் படம் திகழ்கின்றது. ஐந்நூற்றில் ஒன்றாக விளைந்த அற்புதமாக ஒளிவீசுகின்றது!

சில குறைகள்

இவ்வளவு அற்புதமான படத்தில் சில குறைகளும் இல்லாமல் இல்லை.

—'பொலியோ பொலி' என்

னும் பாடலைப் பாதியாகக் குறைத்திருக்கலாம்.

—வேணுவும், ராதாவும், காவேரியும் புல்லாங்குழல் வாசித்துப் பாடும் காட்சியை வெட்டியிருக்கலாம்.

—கர்ணம் ராதாவைக் கற்பழிக்க முயலும் காட்சியை நீக்கியிருக்கலாம். இந்தக் காட்சியை நீக்குவதால் ராதாவின் குணச் சித்திரத்திற்கும், கர்ணத்தின் குணச்சித்திரத்திற்கும் எவ்வித கெடுதலும் இல்லை.

—ராதா கிணற்றடியில் ஊர்ப் பெண்களுக்குப் பதில்சொல்லும் காட்சியையும் குறைத்திருக்கலாம்.

—படத்தில் பாடல்கள் ஒலிப் பதிவு தெளிவாக இல்லை.

—மூன்று அல்லது மூன்றரை நிமிடத்திற்குமேல் இருக்கும் பாடல்களையெல்லாம் குறைத்து 19000 அடி நீளமுள்ள படத்தை 16000 அடி ஆக்கியிருக்க வேண்டும்.

மொத்தத்தில்

சாரதி சித்திரமான "காலம் மாறிப் போச்சு" இந்தியில் தயாராகப்போவதாக ஒருசெய்திகூறுகின்றது. இது உண்மையானால், மிகவும் வரவேற்கத்தக்கது.

இந்தியில் இப்படம் வெளிவந்தால் பிமல் ராயின் "தோ பிகா ஜமீனை"விடப் பிரமாதமா யிருக்கும்.

பீமல் ராயின் படத்தைப் போல் இதில் ஒளிப்பதிவு, ஒலிப் பதிவு, எடிடிங் ஆகிய திரைப்பட நுணுக்கங்கள் சிறப்பாய் இல்லை. எனினும், கதை அம்சத்தில் இப்படம் 'தோ பிகா ஜமீனை' விட பெரும்பான்மை மக்களைக்கவரும் என்பதில் சந்தேகம் இல்லை.

—'தி. க. சி.'

இந்தியாவில் பௌத்த ஸ்தலங்கள்

"சஞ்சாரி"

பௌத்தத்தில் உண்மையான நம்பிக்கை யுள்ளவர்கள், பயபக்தியுடனும் நம்பிக்கையுடனும் தரிசித்துவரவேண்டிய ஸ்தலங்களாக, நான்கு ஸ்தலங்களை புத்தர் தாம் பரிநிர்வாண முக்தி பெறுவதற்குமுன் குறிப்பிட்டிருந்தார். லும்பினிவனம், புத்தகயா, இசிபட்டணத்திலுள்ள மான்வனம், குஸிநகரம் ஆகியவைதான் அந்நான்கும். அவைகளில் லும்பினிவனத்தில் தான் தாதகாதர் (புத்தர்) பிறந்தார்; புத்தகயாவில்தான் அவர் ஞான ஒளி பெற்ருர்; மான் வனத்தில் அவர் முதன்முதலாக தர்ம விதிகளை உபதேசித்தார். குஸிநகரத்தில்தான் அவர் நிர்வாண முக்தி பெற்ருர்.

பௌத்த இலக்கியங்களில், இன்னும் நான்கு ஸ்தலங்கள் விசேஷமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை சிரவஸ்தி, சங்காஸ்யா, ராஜகிருஹ, வைசாலி ஆகியவைகளாகும்.

லும்பினிவனம் நேப்பாளத்தில் இருக்கிறது. புத்தர் பிறந்த ஸ்தலம் என்ற முறையில் அது பிற்காலத்தில் மிகவும் விசேஷ முக்கியத்துவம் பெற்று அங்கே பல ஸ்தாபனங்களும் சின்னங்களும் நிர்மாணிக்கப்பட்டன. அவைகளில் இப்போது அனேகமாய் எதுவுமே இல்லை. அசோக சக்கரவர்த்தி அந்த ஸ்தலத்துக்கு விஜயம்செய்ததை நினைவூட்டும் ஸ்தம்பம் ஒன்று அங்கே இன்னும் இருக்கிறது. "இங்கே புத்தர் பிறந்தார்" என்று அசோகர் அதில் எழுதுவித்திருக்கிருர். அதனுல் அந்த ஸ்தலத்தைப் பற்றிச் சந்தேகமே ஏற்படுவதற்கில்லை. அந்த ஸ்தூபி

இந்திய அரசாங்கத்தின் வெளியீடான "பௌத்தத்தின் 2500 வருஷகால வரலாறு" என்ற புத்தகத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டது இந்தக் கட்டுரை,

தவிர, அங்கே ஒரு "கோவில்" இருக்கிறது. அதில் புத்தர் அவதரிப்பைக் காட்டும் பிம்பம் இருக்கிறது.

புத்தகயா ஹிந்துக்களின் புண்ணிய ஸ்தலமான கயாவுக்கு ஆறு மைல் தெற்கில் இருக்கிறது. புத்தர் ஞான ஒளிபெற்ற இந்த ஸ்தலத்தில் ஏராளமான கோவில்களும் விஹாரங்களும் சின்னங்களும் எழுப்பப்பட்டன. சீன யாத்திரிகர் யுவான் சுவாங் அந்த ஸ்தலத்தை வெகு விஸ்தாரமாக வர்ணித்திருக்கிருர். அசோக சக்கரவர்த்தி முதல்முதலில் அங்கே விஹாரம் அமைத்ததை அவர் நன்கு வர்ணித்திருக்கிருர்.

இப்போது அங்கே அதன் சின்னங்கள் இல்லை. தற்போதுள்ள பெரிய கோவில் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். அது பலமுறை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனல், யுவான் சுவாங் வர்ணனையைக் கவனித்தால், இப்போதுள்ள கோயில் போன்ற கோயில்தான் கி. பி. 7-ம் நூற்றுண்டிலும் இருந்ததென்று தெரிகிறது. இக்கோயிலை மாதிரியாகக் கொண்டுதான் பர்மாவில் மகாபோதி கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது.

தற்போது புத்த கயாவிலுள்ள மகாபோதி கோயிலில் புத்தரின் பொன் விக்ரகம் இருக்கிறது; பூமியில் அடிவைத்து நிற்கிற பாவனையில் இது இருக்கிறது.

சாரநாத்தில்தான் பௌத்த மதம் உதயமாயிற்று என்று கூறலாம். அதனல் அந்த இடம் சுமார் 1500 வருஷங்களாகப் புனித ஸ்தலமாகப் பெயர்பெற்று விளங்குகிறது. அங்கேதான் புத்தர் தர்ம சக்கர பிரவர்த்தனம் செய்ததாக, நீதியை உபதேசித்ததாகக் கருதப்படுகிறது. ஆரம்ப காலத்தில் இருந்த மான் வனம் பற்றி நூல்கள் அதிகமாக பிரஸ்தாபிக்கவில்லையாயினும், அசோகர் காலத்துக்குப் பிறகு அது பிரபலமடைந்து விட்டது.

அங்கே ஒரு பெரிய செங்கல் கட்டடக் குன்று இருக்கிறது. அதன் உச்சியில் அஷ்டகோண கோபுரம் ஒன்று இருக்கிறது. முன்பு அங்கிருந்த ஸ்தூபியின் இடிபாடுதான் அந்தக் குன்று. புத்தகயாவிலிருந்து இசிபட்டணத்துக்குச் செல்லும் மார்க்கத்தில் தம் பழைய சகாக்கள் ஐந்து பேரைச் சந்தித்த அந்த ஸ்தலத்தில் முந்திய ஸ்தூபி எழுப்பப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அந்த இடத்திலிருந்து அரை மைல் தூரத்தில்தான் மான் வனம் இருக்கிறது. அந்த ஸ்தலம் புகழோங்கி நின்ற காலத்தில் அங்கே பல கட்டடங்கள் இருந்திருக்கவேண்டும்; இப்போது அங்கே 150 அடி உயரத்தில் தாமேக ஸ்தூபியின் இடிபாடுதான் இருக்கிறது. அசோகர் காலத்திலிருந்தே அங்கே பல கட்டடங்கள்கட்டப்பட்டிருந்தன.

அசோகர் ஸ்தம்பம் ஒன்று அங்கே உடைந்த நிலையில் இருக்கிறது. உடைந்துபோன

உச்சிப் பாகம் அருகிலுள்ள பொருட்காட்சிச்சாலையில் இருக்கிறது.

தற்காலத்தில் மகாபோதி சங்சங்கம் நிர்மாணித்துள்ள மூல-கந்தகுடிவிஹாரம் தான் இப்போது முக்கியமாக விளங்குகிற கட்டடம். அந்த விஹாரத்தில் தக்ஷசீலம், நாகார்ஜுன கொண்டா, மீர்பூர்காஸ் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட புத்த சின்னங்கள் பத்திரமாக வைக்கப்பட்டு பூஜிக்கப்படுகின்றன.

அருகிலுள்ள பொருட்காட்சிச் சாலையில், அந்த ஸ்தலத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளசின்னங்களும், பொருள்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் அரசாங்க சின்னமாக இப்போது விளங்குகிற சிங்கமும் தர்மசக்கரமும் அங்கே சின்னங்களாக வைக்கப்பட்டுள்ள ஸ்தூபியில் லிருந்து மாதிரியாக எடுக்கப்பட்டவைதான்.

புத்தர் தர்மசக்கர பிரவர்த்தன முத்திரையுடன் வீற்றிருக்கும் கற்சிலை அங்கேயுள்ள காட்சிப் பொருள்களில் மிகவும் விசேஷமானது.

உத்தர பிரதேசத்தில் கோரக்பூர் ஜில்லாவில் உள்ள காசியா என்னுமிடம்தான் குஸிநகரம் அல்லது குஸினரா என்று கருதப்படுகிறது. புத்தர்முக்திபெற்ற ஸ்தலமாதலால் அது மிகவும் விசேஷ ஸ்தலமாகும். புராதன காலத்திலேயே அந்த ஸ்தலம் அழிந்துவிட்டது. பாஹியானும் யுவான்–சுவானும் அதன் அழிவுநிலை பற்றிக் கூறியிருக்கிறார்கள்.

அங்கு இன்னும் அழியாமல் இருக்கும் ஒரு சில கட்டடங்களில் புத்தர் கோயிலும் ஒன்று. அதில் புத்தர் சயனக் கோலத்தில் இருக்கிறார். உடைத்திருந்த அந்தச் சிலை சரி செய்யப்பட்டிருக்கிறது.

புத்தரின் பூதவுடல் எரிக்கப்பட்ட ஸ்தலத்தில் ஒரு மேடு இருக்கிறது. அந்த இடத்தைத் தோண்டி நன்றாக ஆராய்ந்தால் அரிய தகவல்கள் கிடைக்கும்.

சிரவஸ்தி என்பது அக்காலக் கோசல நாட்டுத் தலைநகர். இப்போது உத்தர பிரதேசத்திலுள்ள சஹேத் - மஹேத் தான் அது என்று கருதப்படுகிறது. அந்த ஸ்தலத்தில் புத்தர் பல அதிசயங்களை நிகழ்த்தினார். பிரசேன்ஜித் அரசனின் வேண்டுகோளின் பேரில் புத்தர் அங்கே அச்செயல்களை நடத்தினார். அவர் ஆயிரம் இதழ் தாமரை ஒன்றில் அமர்ந்து பல புத்தர்களை சிருஷ்டித்துக் காட்டினாராம். இந்த அருஞ்செயலை பௌத்த மத சித்திரங்களில் பிரபல அம்சமாகக் காணலாம்.

சங்காஸ்யா என்னும் ஸ்தலம் (உத்தர பிரதேசத்திலுள்ள சங்கீசா-பசந்தபூர்) புத்தர் சொர்க்கத்திலிருந்து இறங்கிவந்த ஸ்தலம் என்று கருதப்படுகிறது. முப்பத்து மூன்று தேவர்களின் ஸ்வர்க்கத்தில் புத்தர் தன் தாய்க்கும் இதர தேவர்களுக்கும்

அபிதர்மத்தைப் போதித்து விட்டு பூலோகத்துக்கு இறங்கி வந்தார் என்று வரலாறு கூறு கிறது. அந்த ஸ்தலத்தில் பௌத்த கோவில்களும், ஸ்தூ பிகளும் மடங்களும் ஏராளமா கக் கட்டப்பட்டன.

ராஜகிருஹ (பீஹாரில் பாட்னு ஜில்லாவிலுள்ள ராஜ் கீர்) பழைய மகத ராஜ்யத்தின் தலைநகரம். பௌத்தர்களுக்கு அது மிகவும் முக்கியமான புண் ணிய ஸ்தலம். புத்தர் அங்கே அடிக்கடி சென்று தங்கி வந்தார் என்பதுடன், அவரது உறவின ரான தேவதத்தன் அவரைப் பல தடவை கொலை செய்ய முயற்சித்த ஸ்தலமும்அதுதான். அங்குள்ள வைபாரா மலையில் தான் முதலாவது புத்த சங்கம் கூடியது. ராஜகிருஹ, ஜைன மதத்தினருக்கும் முக்கியத்துவம் உள்ள ஸ்தலமாகும்.

வைசாலி நகரம் (பீஹார், முசாபர்பூர் ஜில்லாவிலுள்ள பாசார்) லிச்சாவி வம்சத்தாரின் தலைநகரம். பௌத்த மதத் துக்கு அது ஒரு கேந்திர ஸ்தலம். புத்தர் தம் வாழ்நாளில் அதற்கு அடிக்கடி விஜயம் செய் திருக்கிறுர். ஒரு விஜயத்தின் போது அங்குள்ள குரங்குகள் அவருக்கு தேன் வழங்கி உப சரித்தன. தாம் சீக்கிரமே நிர் வாண முக்தி அடையப்போவ தை புத்தர் இங்கேதான் முதல் முதலாக அறிவித்தார். அவர் நிர்வாண நிலை அடைந்த பின் லிச்சாவி வம்சத்தார் அங்கே ஒரு பெரிய ஸ்தூபியை எழுப்பி ஞர்கள். புத்தர் நிர்வாண முக்தி பெற்ற 100 வருஷத்துக் குப் பின் அங்கே இரண்டாவது புத்த சங்கம் கூடிற்று.

வைசாலி நகரத்தில்தான் மகாவீரர் பிறந்தபடியால் அந் நகரம் ஜைனருக்கும் முக்கியத் துவமுள்ளதாகும்.

சாஞ்சி (போபால்) புத்தரின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட ஸ்தலம் அல்லவாயினும், அங் கும், அதைச் சுற்றியும் நிர் மாணிக்கப்பட்ட ஸ்தூபிகள், விஹாரங்கள் முதலியவை கார ணமாய் அது பிரதான பௌத்த ஸ்தலமாகிவிட்டது. அசோகர் காலம் முதலே அங்கே பல சின் னங்கள் எழுப்பப்பட்டுவிட்டன. பெரும்பாலான கட்டுமான வேலைகளும் ஒரு மேடான நிலத் தில் கட்டப்பட்டுள்ளன. அந்த மேட்டைச் சுற்றி கி. பி. 1100-ம் ஆண்டில் ஒரு கற்சுவர் எழுப் பப்பட்டது.

கி. மு. 3-ம் நூற்றுண்டில் எழுப்பப்பட்ட ஸ்தூபிகளும் அங்கே இருக்கின்றன. மிகப் பெரிய ஸ்தூபியின் குறுக்களவு அடிப்பாகத்தில் 100 அடி. அதில் 50 அடி உயரத்துக்கு ஒரு விமானம் இருக்கிறது. அசோகர் காலத்தில் செங்கல்லால் கட்டப் பட்ட அந்த ஸ்தூபி பலதடவை விஸ்தரிக்கப்பட்டு, கல் பாவப் பட்டு நான்கு ஆசார வாசல் களும் அமைக்கப்பட்டன. அந்த வாசல்கள் (தோரணங்கள்) அழ கிய சிற்ப வேலையுள்ளவை.

அவை எல்லாம் ஒன்று போலவே இருக்கின்றன. புத்தர் வரலாற்றுக் கதைச் சிற்பங்களை அவைகளில் காணலாம்.

அசோகர் புத்தகயாவிலுள்ள போதி மரத்துக்கு விஜயம் செய்ததைக் காட்டும் காட்சி ஒன்றும் அச்சிற்பங்களில் இருக்கிறது.

பெரிய ஸ்தூபிக்கு அருகிலுள்ள மற்றொரு ஸ்தூபியில் ஜெனரல் கன்னிங்ஹாம் சில அரிய பௌத்த சின்னங்களை, சாரி புத்த, மகாமொகல்லன ஆகியோரின் அஸ்திச் சின்னங்களைக் கண்டெடுத்தார். அவை சமீபத்தில் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டன.

மற்றொரு ஸ்தூபியில் காஸ்ப்பா, மொக்காலிபுத்த ஆகிய பிரபல புத்த குருமார்களின் சின்னங்கள் இருக்கின்றன.

அசோக ஸ்தம்பம் ஒன்று அங்கே உடைந்து கிடக்கிறது. உடைந்த குற்றியில் அசோகரின் கட்டளைகள் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

ராஜ்கீருக்கு அருகில் உள்ள நலாந்தா பிற்கால பௌத்த கேந்திர ஸ்தாபனங்களில் மிகவும் முக்கியமானது. அங்கே புத்தர் அடிக்கடி விஜயம் செய்ததாக ஐதீகம். அசோகர் காலத்திலிருந்தே அங்கே பௌத்தப் பள்ளிகள் ஏற்பட்டிருந்தன. நலாந்தாவில் கீர்த்திமிக்க பௌத்த ஆசிரியர்கள் இருந்தார்கள். சிலபத்திரா, சாந்தா ரக்ஷிதா, அதீசா, தீபங்கரா முதலிய பிரபல ஆசிரியர்கள் அங்கே தான் வாழ்ந்தார்கள்.

நலாந்தாவிலுள்ள இடிபாடுகள் அங்கு நிர்மாணிக்கப் பட்டிருந்த ஸ்தூபிகள், மடங்கள், கோயில்கள் முதலியவைகளை ஞாபகப்படுத்துகின்றன. இப்போது அங்குள்ள ஒரு பொருட்காட்சி சாலையில் அந்த ஸ்தலத்தின் ஞாபகச் சின்னங்கள் வைக்கப்பட்டுள்ளன. சிலா சாசனங்கள், செம்புப் பட்டயங்கள், செங்கல் எழுத்துக்கள், டெரகோட்டா முத்திரைகள் முதலியவை அங்கு ஏராளமாக இருக்கின்றன. நலாந்தாவில் தலைதூக்கி நின்ற பௌத்தம் தாந்த்ரீக பௌத்தமாகும். அது அநேகமாக தற்கால ஹிந்து மதத்தைப் போன்றதாகவே இருந்தது.

சௌராஷ்டிராவில் பல பௌத்த குகைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவை கி.மு. 2-வது நூற்றாண்டு காலத்தவையாக இருக்கலாம். ஜூனகாடில் அசோகர் கல்வெட்டு இருக்கிறது. கிர்னர் மலைக்கு அருகில் கல்வெட்டுகள் காணப்படுகிறது. அது பிராமி எழுத்திலிருக்கிறது. யுவான்—சுவாங் ஜூனகாடில் ஏராளமான பிக்ஷுக்களைக் கண்டதாகக் கூறியிருக்கிறார். அங்கே பல மடங்களும் இருந்திருக்கின்றன. ஜூனகாட் குகைகளில் இரண்டு அல்லது மூன்று அடுக்குள்ளவை இருக்கின்றன. சமீபத்தில் அந்தப் பிரதேசத்தில் இரண்டு ஸ்தூபிகளின் இடி

பாடுகளும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஜுன்னுகாட் தவிர தாங், சித்தாஸர், கலாஜா, ஸாஞ, வல்லபி ஆகியவைகளும் பிரபல பௌத்த ஸ்தலங்களாக இருந்தன.

சௌராஷ்டிராவில் நவஸாரிக்கு அருகில் உள்ள காம்பில்லியாவில்தான் புத்த சின்னங்கள் காணப்படுகின்றன.

மஹாராஷ்டிரத்தில் அசோகர் காலத்திலிருந்தே பௌத்தம் பரவியிருந்தது. இந்தியாவிலுள்ள பௌத்தக் குகைக் கோயில்களில் பெரும்பாலானவை மேற்கு மஹாராஷ்டிரத்தில் தான் உள்ளன. பாஜா, கொண்டானே, பித்தல்கோரா, பேத்ஸா, நாசிக், கார்லா, கனேரி, வேரூலா, அஜாந்தா ஆகியவைமுக்கியமான பௌத்த குகை ஸ்தலங்கள். இவற்றில் அஜந்தா மிகப் பிரசித்திமானது. அங்குள்ள சித்திரங்கள் உலகப் புகழ் பெற்றவை. புத்தர் வரலாற்றுச் சித்திரங்களும், இதர சித்திரங்களும் அழியாத ஓவியங்களாகத் திகழ்கின்றன.

எல்லோராவில் (வெரூலா) மொத்தமுள்ள 34 குகைகளில் 12 குகைகள் பௌத்தக் குகைகள்; கி. பி. 450-650 காலத்தியவை. பிரதான மண்டபத்தில் பிரம்மாண்டமான புத்தர் சிலை ஒன்று இருக்கிறது. அவர் சிம்மாசனத்தில் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறார். குகைகள் அருமையான வேலைப்பாடுகள் உள்ளவை.

தமிழ்நாட்டில்

கர்னடகத்தில் அசோகர் காலம் முதலே பௌத்தம் பரவியிருந்தது. சித்தாப்பூரில் அவரது கல்வெட்டு இருக்கிறது. பாணவாசியில் சதவாஹன மன்னர் காலத்தில் பௌத்த மடாலயங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

ஆந்திராவில் அசோகர் காலம் முதலே பௌத்தம் வேரூன்றிப் பரவியது. மகதத்துக்கும், இலங்கைக்கும் மத்தியிலுள்ள ஆந்திரம் பௌத்தத்துக்கு ஒரு முக்கிய ஸ்தலமாக விளங்கியது. பெரும்பாலும் வணிகர்கள் புத்தர் மதத்தைத் தழுவினர்கள். அவர்கள் மிகச் சிறந்த ஸ்தூபிகளை நிர்மாணித்தார்கள். கிருஷ்ண - கோதாவரி நதிகளுக்கிடைப்பட்ட ஸ்தலத்தில் பல ஸ்தூபிகள் கட்டப்பட்டன.

அமராவதி, நாகார்ஜுன கொண்டா, பட்டிப்ரோலு, ஐக்கய்யபேட்டா, குடிவாடா, கண்டசாலா ஆகியவிடங்களில் கி. மு. இரண்டாவது நூற்றுண்டு முதல் கி. பி. 3-வது நூற்றுண்டு வரையில் பல ஸ்தூபிகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. அமராவதிதான் ஆந்திராவில் இருந்த மிக முக்கியமான புத்த ஸ்தலமாகும். அங்குள்ள ஸ்தூபிதான் மிகப் பிரம்மாண்டமானது. அது சாஞ்சி ஸ்தூபியைவிடப் பெரியது; மிகவும் அழகானது. மதுரா, காந்தாரா சிற்பக் கலைகளைப்போலவே அமராவதி சிற்பக் கலையும் பிராபல்யம் பெற்றது. இலங்கை, தென்கிழக்கு

சாரநாத் ஸ்தூபி.

ஆசியா ஆகிய நாடுகளுக்கு அந்தக் கலை பரவியது. நாகார்ஜுன கொண்டாவிலுள்ள ஸ்தூபி 25 வருஷங்களுக்குமுன் தான் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மஹா ஸ்தூபியில் புத்தரின் அஸ்திகள் வைத்துப் பூஜிக்கப்பட்டன. பலமுறை அந்த ஸ்தூபி புதுப்பிக்கப்பட்டது. இக்ஷ்வாகு வம்சத்தினர் அப்பணியை மேற்கொண்டனர். விஜயபுரி என்று வழங்கிய நாகார்ஜுனகொண்டா சர்வதேசப் புகழ்வாய்ந்த பௌத்த கேந்திரமாக விளங்கியது.

தமிழ்நாட்டில் சோழர் காலத்தில் நாகப்பட்டினம் சிறந்த பௌத்த ஸ்தலமாக விளங்கியது. ஸ்ரீவிஜய நாட்டு மன்னனை மாரவிஜயோத்துங்கன், இந்தோனேஷிய மன்னனை கடகன் ஆகியோர் அங்கே நிர்மாணித்த சூளாமணி விஹாரத்துக்கு ராஜாஜசோழன் ஆனைமங்கலம் கிராமத்தை மானியமாகக் கொடுத்தானென்று ஒரு செப்பேடு கூறுகிறது. அந்த விஹாரம் தம்மசோக விஹாரமென்று கூறப்பட்டது. காஞ்சி நகரமும் ஒருகாலத்தில் புத்தர்களின் நிலைக்களனாக இருந்தது. நூற்றுக் கணக்கான மடாலயங்களும், ஒரு ராஜவிஹாரமும் அங்கே இருந்தன. ★

உடல் அறிந்த உத்தமன்

— அ. நடராஜன் —

விஞ்ஞானம் கண்டுபிடித்திருக்கும் விஷயங்கள் பல. அவற்றின் உதவியினால் நமது வாழ்க்கை வசதிகள் பெருகியிருக்கின்றன. வாழ்க்கை, பண்டைக்காலத்தில் இருந்ததைப் போல் இப்போது அவ்வளவு சிரமமாக இல்லை. இதற்குக் காரணம் விஞ்ஞானத்தில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி என்பதில் சிறிதும் ஐயமில்லை. விஞ்ஞானம் என்பது திடீரென்று தோன்றியது அல்ல. முதல் முதலாகத் தோன்றிய மனிதனுக்குச் சுற்றுப்புறத்தில் உள்ள பொருள்கள், தோற்றங்கள் ஆகியவற்றின் உண்மைக் காரணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆசை எப்போது முளைவிட்டதோ அப்போதே விஞ்ஞானம் பிறந்துவிட்டது. ஆனால், வெகுகாலமாக ஆராய்ச்சி சரியான முறையில் நடைபெறவில்லை.

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டிலே பரிசோதனைமுறையின் முக்கியத்துவத்தை அறிஞர்கள் உணரத் தொடங்கினர். பழமை தவறாக இருப்பினும் அதுதான் உண்மை என்று அடித்துப் பேசுவதில் இன்பம் கண்டவர்களுக்குப் புதுமுறை வேண்டா வெறுப்பாகத் தோன்றியது. ஆனால், உண்மையின் வளர்ச்சியைத் தடைசெய்ய எவராலும் முடியாதல்லவா? விஞ்ஞானத் துறையிலே உண்மைக்காகப் போராடி, சொல்ல முடியாத துன்பங்களையும் இடையூறுகளையும் சகித்துக்கொண்ட உத்தமர்கள் பலர். அவர்களில் ஒருவரான அண்ட்ரியஸ் விஸேலியஸ் என்பவரைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

அண்ட்ரியஸ் விஸேலியஸ் 1514-ம் ஆண்டில் டிஸம்பர் மாதம் 31-ம் தேதி இரவு ப்ரஸ்ஸல்ஸ் என்னும் இடத்தில் பிறந்தார். அவருடைய குடும்பத்திலே பல வைத்தியர்கள் இருந்திருக்கிறார்கள்; ஆதலால், வைத்தியப் படிப்பிலே அவருக்கு விருப்பம் ஏற்பட்டது இயற்கைதானே! பிராணிகளின் உடல் அமைப்பு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதிலே அவருக்கு ஒரு தனி மகிழ்ச்சி. சிறு வயதிலேயே முயல், நாய், சிறு பறவைகள் போன்ற பிராணிகளை அவர் அறுத்துப் பரிசோதனை செய்துகொண்டிருப்பது வழக்கமாம்! விளையும் பயிர் முளையிலே! பதினெட்டாவது வயதுவரை லூவெய்ன் சர்வ கலாசாலையில் படித்துவந்தார். பிறகு வைத்தியப் படிப்பிற்காக

விஸேலியஸ் பாரிஸ் நகரம் சென்றார். அங்கே ஸில்வியஸ் என்பவர் அப்போது பாடம் சொல்லிவந்தார்.

உடல் அமைப்பு, மருத்துவம் ஆகியவற்றில் கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் இருந்த காலென் என்பவருடைய கொள்கைகள் தாம், அந்தக் காலத்தில் வழக்கில் இருந்தன. வகுப்பில் ஸில்வியஸ்ஸும் காலெனுடைய கருத்துக்களைப் படித்து விளக்கிச் சொல்வதுதான் வழக்கமாம். அவ்வப்போது தற்செயலாகக் கிடைக்கும் பிராணிகளின் உடல்களை நாவிதர்கள் ஓர் ஒழுங்கின்றி அறுத்து உட்பகுதிகளைக் காட்டுவார்கள். அவர்கள் ஓர் ஒழுங்கும் இல்லாது கண்டபடி உடல்களை அறுப்பது விஸேலியஸ்ஸுக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் பாடம் நடந்துகொண்டிருக்கும்போது நாவிதர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தானே எந்த முறையில் அறுக்கவேண்டும் என்பதை எல்லோருக்கும் தெளிவாகக் காட்டினராம் விஸேலியஸ்! ஆனால், மனித உடலை அறுத்துப்பார்க்கும் வசதி அவருக்கு அங்கே கிடைக்கவில்லை. அவர், அருகில் உள்ள புதைகுழிக்குச் சென்று சிதறிக் கிடக்கும் எலும்புகளைக் கவனித்து ஆராய்ச்சி செய்வாராம்! அந்தச் சமயத்தில் பெல்ஜியம் நாட்டில் போர் மூண்டது. அதனால் அவர் மறுபடியும் லூவெய்னுக்குப் போகவேண்டியதாயிற்று.

உடல் அமைப்பைப்பற்றித் தெரிந்துகொள்ள அவருக்கு இருந்த ஆர்வம்மட்டும் சிறிதும் குறையவில்லை. லூவெய்னிலும் மனித உடல்களை அறுத்துப் பார்க்கும் வசதி அவருக்குக் கிடைக்கவில்லை. மரண தண்டனை அடைந்த குற்றவாளிகள் தூக்கில் இடப்பட்டவுடன் காவலாளிகள் அவர்களுடைய உடல்களை அங்கேயே போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். ஒருநாள் மாலை விஸேலியஸ்ஸும் அவருடைய நண்பர் ஒருவரும் அங்கு சென்றபோது ஓர் எலும்புக்கூடு அங்கே இருந்ததாம்; அதைக் கண்டவுடன் அவர்களுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! அன்றிரவு ஒருவருக்கும் தெரியாமல் விஸேலியஸ் அந்த எலும்புக்கூட்டைத் தனது வீட்டிற்குக் கொண்டு வந்துவிட்டாராம்.

அந்தச் சமயத்தில்தான் பாடுவாவின் புகழ் அவருக்கு எட்டியது. அறிவை வளர்த்துக் கொள்ளப் பல வசதிகள் அங்கே கொடுக்கப்படுகின்றன என்று அவர் கேள்விப்பட்டார். உடனே விஸேலியஸ் 1537ம் ஆண்டில் பாடுவா சென்றார். அவருடைய புலமையைக் கண்ட பாடுவா சர்வகலாசாலை அதிகாரிகள் அவருக்கு அந்த ஆண்டிலேயே எம். டி. பட்டம் அளித்தார்கள். அதுமட்டும் அல்லாமல் உடல்களை அறுத்துப் பரிசோதனை செய்து காண்பிக்கவும் அவரையே நியமித்தார்கள். இருபத்திரண்டாவது வயதில் ரண சிகிச்சை, உடல் அமைப்பியல்

ஆகிய பகுதிகளுக்கு அவர் தலைவர் ஆனார்.

உடல் அமைப்பியல்பற்றிய ஆராய்ச்சியை விஸேலியஸ் தனது புதிய முறையிலே தொடங்கினார். உடலை அறுத்துக் காண்பித்துப் பாடம் சொல்லும்போதெல்லாம் அவரும் காலெனுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வார்; ஆனால், கண்முன்னே இருந்த உடல் பகுதிகள் காலெனுடைய கருத்துக்கள் பல தவறானவை என்பதையே எடுத்துக்காட்டின! அத்தகைய தவறான கருத்துக்களை ஒதுக்கிவிட்டுக் கண்ணால் கண்ட விஷயங்களையே அவர் சொல்லத் தொடங்கினார். இவ்வாறு உடல்களை அறுத்துப் பரிசோதனை செய்துவந்த அவர், மனித உடலின் அமைப்பைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள நேரிட்டது. கி. பி. 1542ஆம் ஆண்டில் உடலின் அமைப்பை விளக்கும் பல படங்களுடன் கூடிய அரிய நூல் ஒன்றை விஸேலியஸ் எழுதி வெளியிட்டார். தற்காலத்திய உடல் அமைப்பியலுக்கு அது ஓர் அஸ்திவாரம் என்று கூறுவது மிகையே ஆகாது.

உடலின் பல பகுதிகள் செய்யும் அலுவல்களைக் குறித்து அவர் புதிய விவரங்களைக்கண்டு பிடித்தார் என்று சொல்வதற்கு இல்லை. எனினும், உடலியல் அறிவு வளர்வதற்கு அவருடைய பரிசோதனைகள் அடிகோலின என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. 'பரிசோதனை முறை'யை அறிஞர்கள் அறிந்து கொள்ளுமாறு செய்த பெருமையும் அவரையே சார்ந்தது. "உடலையும் அதன் அமைப்பையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்றால் காலென் என்ன கூறியிருக்கிறார் என்று பார்த்து விட்டுச் சும்மா இருப்பது தவறு. உடலை அறுத்து நேரடியாகக் கவனிக்கவேண்டும்" என்று விஸேலியஸ் எடுத்துக் கூறினார், மேலும் "மத நூல்களில் எழுதியிருப்பவை எல்லாம் உண்மையானவை; அவற்றுக்கு மாறாக இருப்பவை எல்லாம் தவறானவை" என்று மக்கள் நினைத்து வந்த காலம் அது. பழமையிலேயே ஊறிப்போய் புதுமையைப் புரிந்துகொள்ளாத காலம் அது. ஆதலால் உடல் அமைப்பைப்பற்றிய விஷயங்களிலேயே அவர் அதிகக் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. உடலின் பல பகுதிகளின் அலுவல்களைப் பற்றி தனக்கு இருந்த கருத்துக்களை அவர் வெளியிடத் தயங்கினார். உண்மையில், 'மனித உடலின் அமைப்பு' என்னும் அவருடைய புத்தகம் வெளியானதும் சிறிது காலம் அவர் பாடுவாவை விட்டு வெளியே சென்றிருந்தார். காலெனுடைய கருத்துக்கள் பல தவறானவை என்று அந்தப் புத்தகத்திலே அவர் எழுதியிருந்தார். ஸில்வியஸ் முதலியவர்கள் அவருடைய புதிய கருத்துக்களை வரவேற்கவில்லை; மேலும், "விஸேலியஸ் சொல்லுவது எல்லாம் தவறு; அவருக்கு ஒன்றுமே தெரியாது"

என்று குறை கூறவும் அவர்கள் தயங்கவில்லை.

சுமார் ஓராண்டுகாலம் கழித்து விஸேலியஸ் பாடுவாவிற்குத் திரும்பினூர்; தனது புத்தகத் திற்கு இருந்த எதிர்ப்பை பற் றிக் கேள்விப்பட்டார். மிகவும் சிரமப்பட்டுத் திரட்டிய அறிவை அங்ஙனம் அவர்கள் அலட்சியம் செய்வது அவருக்குப் பிடிக்க வில்லை. கோபத்தில் தன்னிடம் இருந்த கையெழுத் து ப் பிரதி கள் பலவற்றைக் கிழித்துவிட்டா ராம் விஸேலியஸ். அறிவுலகத் திற்கு எத்தனை பெரிய நஷ்டம்!

அ ந் த ச் சமயத்தில்தான் ஸ்பெயின் தேசச்து அரசனுன ஐந்தாவது சார்லஸ் தனது ஆஸ்தான வைத்தியராக இருக் கும்படி விஸேலியிஸை அழைத் தான். அந்த அழைப்பை ஏற் றுக்கொண்டு விஸேலியஸ் பாடு வாவிலிருந்து உடனே சென்று விட்டார்.

வீட்டில்கூட அவர் உடல் களை அறுத்துச் சோதனை செய்வது வழக்கமாம்; வீடுகூட அவருக்குச் சோதனைச் சாலை யாகவே இ ரு ந் து வ ந் த து. ஆனுல், 1545-ல் அவர் மணம் புரிந்துகொண்டபிறகு வீட்டிலே நடந்துவந்த சோதனைகள் எல் லாம் நின்றுவிட்டன. அக்காலத் தில் ஸ்பெயின் தேசம் ஒரு விஞ் ஞானி இருப்பதற்குத் தகுந்த இடமாய் இல்லை. மத நூல்களில் எழுதப்பட்டிருப்பதற்கு மாருக யாரேனும் சொன்னுல் மதகுரு மார்கள் அவருக்கு எவ்வளவு இடைஞ்சல்களை உண்டாக்கமுடி யுமோ அவ்வளவையும் செய்யத் தயங்கமாட்டார்கள். அ றி வு வளர்ச்சிக்குக் கூடத் தடையா என்று விஸேலியஸின் மனம் வெதும்பியது. ஆயினும் அவர் தன்னம்பிக்கையை இழந்துவிட வில்லை. "மனித உடலைப்பற்றி யும் மனிதனின் உண்மையான இயல்பைக் குறித்தும் என்றைக் காவது ஒருநாள் எனதாராய்ச்சி யைத் தொடர்ந்து நடத்துவேன் என்னும் நம்பிக்கை எனக்கு இன்னமும் இருக்கிறது" என்று தம் குறிப்புகளில் அவர் எழுதி வைத்திருக்கிருர்.

ஆனுல் மனிதன் விரும்புவது போலவே எதுவும் நடந்துவிடு வதில்லை. 1563-ல் அவர் திடீ ரென்று ஜெருஸெலம் நகருக்கு யாத்திரையாகக் கிளம்பிவிட்டார் அதற்குக் காரணம் என்ன என் பதைப்பற்றித் தெளிவான தக வல் எதுவும் கிடைக்கவில்லை. இறந்துபோன ஒரு கனவா னுடைய உடலையோ அல்லது இனம் தெரியாத ஏதோ ஒரு நோயினுல் வருந்தி மரணம் அடைந்த ஒரு பெண்மணியின் உடலையோ சோதனை செய்து கொண்டிருந்தபோது அந்த உடலில் உயிர் இருப்பது தெரிய வந்ததாகவும் அந்தப் பாவத்திற் குப் பிராயச்சித்தமாக ஜெருஸெ லம் நகருக்கு அவர் யாத்திரை போகவேண்டும் என்று மதகுரு மார்கள் வற்புறுத்தியதாகவும் சொல்லப்படுகிறது. எ ப் ப டி யிருப்பினும் அறிவு வளர்ச்சிக்கு வசதி அளிக்காத அந்த நாட்

டை விட்டு வெளியேறுவதே நல்லது என்று விஸேலியஸ் தீர்மானித்திருக்கவேண்டும். போகும் வழியிலே வெனிஸ் நகரத்தில் தங்கித் தனது பழைய நண்பர்களுடன் விஞ்ஞான விஷயங்களைப்பற்றி அளவளாவி மகிழ்ந்தார். அங்குள்ள அதிகாரிகள் அவரை மீண்டும் ரணசிகிச்சை நிபுணராகப் பதவி ஏற்கும்படி கேட்டுக்கொண்டபோது விஸேலியஸ் தனது சம்மதத்தைத் தெரிவித்தாராம். ஆனால், ஜெருஸெலம் போய்த் திரும்பிவரும் வழியில் ஸாண்டே என்னும் தீவில் 1564-ம் ஆண்டில் அவர் இறந்துவிட்டார்.

நவீன உடல் அமைப்பியலுக்கு வழி காட்டியாக விளங்கினர் விஸேலியஸ். உயிரியல் நூல்களிலே பரிசோதனை முறைக்கு முதலிடம் அளித்து இன்றைய மருத்துவத்துக்கு அடிகோலிய பெருமையும் அவரையே சேரும். விஞ்ஞான வளர்ச்சியிலே அவருக்கு ஓர் உயர்ந்த இடம் என்றைக்கும் உண்டு.

சரஸ்வதி

ஒவ்வொரு ஆங்கில மாதமும்
முதல் தேதியன்று வெளிவருகிறது

சந்தா விவரம்

தனிப்பிரதி 2 அணு
ஆண்டு சந்தா ரூ. 1-8-0.

தனிப்பிரதி வேண்டுவோர் மூன்றணு ஸ்டாம்பு
அனுப்பிவைக்கவும்.

நிர்வாகி

சரஸ்வதி

1, ராஜா அண்ணுமலை செட்டியார் ரோடு,
வேப்பேரி :: சென்னை-7.

தாமரையும் பனித்துளியும்

"மதுரைப் பாண்டியன்."

(பள்ளுச் சிந்து)

ஏரியிலே நீர்வற்றச் சேரியெலாம் காடு—அங்கே
 எழுந்துநிற்கும் தாமரையின் ஒருகொழுந்தே!
மாரிசொரியக் குறியில்லை; ஊரெலாம் பாழே—கரிய
 வானம்பார்த் துத்தாமரை மோனமானதே!

வானத்தில் இருள்மூடிப் போனகுறியைக்—கீழே
 வாடிநின்ற தாமரைதான் தேடியதுகாண்!
ஈனமிக்க இளந்தண்டு கூனிநிற்கப்—பொழுது
 இரவோடு இரவாகப் பரந்ததுவே!

இருண்டிருந்த வேளையங்கே வெருண்டதோற்றம்—அந்த
 இதழ்குவிந்த தாமரையும் உதயத்தையே
அருள்கொண்டே எதிர்நோக்கி மருண்டதுகாண்-கிழக்கே
 அடிவானம் வெளுக்கவில்லை; விடியவில்லை.

ஆற்றாத துன்பத்தைத் தோற்றுங்குரல்—சேரி
 அண்டையெலாம் கேட்டதுவே! துன்பமென்ன?
கூற்றாக வந்ததுவோ ஆற்றாதபசி—அந்தக்
 குடியெங்கும் கூக்குரலே விடியுமட்டும்!

அடிவானம் வெளுத்ததுவே; விடியற் காலம்—சேரி
 அத்தனையும் வெறிச்சென்று சத்தமின்றித்
துடிப்பின்றிப் போனதுவே; குடியிருப்பில்—மக்கள்
 தொலைதூரம் வேலைதேடி அலைந்தனரே!

ஏரியிலே நீர்வற்றச் சேரியெலாம் காடு—அங்கே
 இதழ்விரியத் தாமரையும் பதைத்ததுவே!
மாரிசொரியக் குறியில்லை; ஊரெலாம் பாழே—வெள்ளை
 வானம்பார்த் துத்தாமரை மோனமானதே!

எழுந்துநின்ற தாமரையின் ஒருகொழுந்து—தீரில்
 இதழ்விரித்து மலர்ந்ததுகாண் உதயத்திலே!
விழுந்தபனித் துளியதனில் அழுதகண்ணீர்—போல
 வீற்றிருந்து துயரத்தைத் தோற்றியதுகாண்!

குட்டிக்கதைகள்

யார் கோழை?

காட்டிலுள்ள முயல்கள் எல்லாம் ஒருநாள் கூட்டம் கூடின. தங்களுடைய பரிதாப நிலையைப் பற்றி அவை விவாதித்தன.

"இது என்ன வாழ்க்கை? துளிகூட நிம்மதி என்பதே இல்லாத வாழ்க்கை. அமைதியாகச் சாப்பிட முடிவதில்லை; தூங்க முடிவதில்லை. ஒரு நிழலைக் கண்டால் கூடப் பயப்பட வேண்டியிருக்கிறது. இலைகள் அசையும் சப்தம் கேட்டாலும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடவேண்டியிருக்கிறது. இப்படிப் பயந்து பயந்து உயிர் வாழ்வதைவிட செத்துப் போவதே மேல்" என்றெல்லாம் அவைகள் பேசின.

கடைசியில் தாங்கள் எல்லோரும் செத்துப் போவது என முடிவு செய்தன. குளத்தில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளத் தீர்மானித்தன. குளத்தை நோக்கி எல்லா முயல்களும் அணிவகுத்துச் சென்றன.

அந்தக் குளக்கரையில் ஏராளமான தவளைகள் நிலவை அனுபவித்துக் கொண்டிருந்தன. முயல்கள் வரும் சத்தத்தைக் கேட்டு அவை பயந்துபோய் குளத்துக்குள் குதித்தன. தவளைகள் தண்ணீரில் பாய்ந்த சத்தத்தைக் கேட்டுத் தற்கொலைசெய்து கொள்ள வேகமாக வந்த முயல்கள் பயந்துபோய் சட்டென்று நின்றன. உடனே புத்திசாலியான ஒரு கிழமுயல் தனது கூட்டத்தைப் பார்த்துச் சொன்னது:

"சகோதரர்களே! அப்படியே நில்லுங்கள். நாம்தான் பயங்கொள்ளிகள் என நினைத்தோம். ஆனால் நம்மைவிடப் பயந்தவர்களும் இருக்கிறார்கள் என்பது தெரிந்து போயிற்று. அப்படியானால் நாம் ஏன் சாகவேண்டும். திரும்பிப் போவோம் வாருங்கள்."

கிழமுயல் சொல்லுவது சரிதான் என்று முயல்களுக்குப் பட்டது; மகிழ்ச்சியோடு வந்த வழியே திரும்பிப் போயின.

* * *

சேரிடம் அறிந்து சேர்

ஒரு புறாக் கூட்டில் புறாக்கள் ஆனந்தமாக உண்டு களித்திருப்பதை ஒரு காகம் பார்த்தது. தானும் அந்தப் புறாக்களுடன் சேர்ந்து வாழ விரும்பியது. எந்த விதமாகப் புறாக்களுடன் சேர்ந்து வாழுவது என்று யோசித்தது. யோசித்தது, யோசித்தது அப்படி

ஈசாப்

யோசித்தது. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது. அதன்படி தன் சிறகுகளுக்கு வெள்ளை வர்ணம் பூசிக் கொண்டது. ஒரு நாள், இரவு நேரத்தில் யாரும் அறியாமல் புருக் கூண்டுக்குள் நுழைந்துவிட்டது. அது வாயைத் திறவாமல் இருந்தவரை அதை யாரும் கவனிக்கவில்லை. சௌக்கியமாக உண்டு களித்து இருந்தது. வர வர அதற்குத் தைரியம் அதிகமாயிற்று. தைரியமும் களிப்பும் ஒன்றுசேர்ந்து கொள்ளவே, தன் அதிர்ஷ்டத்தை நினைத்து ஒருநாள் பலமாய் வாய்விட்டுச் சிரித்தது. அதனால் அதன் குரல் வெளிப்பட்டுவிட்டது. அது யார் என்பதை மற்ற புருக்கள் கண்டு கொண்டன. அதை வெளியே அடித்துத் துரத்தின. அவமானமடைந்த காகம், மேலெல்லாம் காயங்களுடன் தன் இனத்தாரிடம் சென்றது. அங்கே அதன் நிறத்தையும், அடிபட்டு இருந்த கோலத்தையும் மற்ற காகங்கள் பார்த்தன. இதன் தந்திரச்செய்கையை உணர்ந்து தங்களோடு சேர்த்துக்கொள்ள அவை மறுத்துவிட்டன.

* * *

தகாத ஆசை

ஒரு காட்டு அதிகாரியின் மகள் மீது சிங்கம் காதல் கொண்டது. அதிகாரியிடம் அது சென்று தனக்கு அவர் மகளைக் கல்யாணம் செய்து வைக்கும்படிக் கேட்டது. அதிகாரிக்கு சிங்கத்திடம் பயம். அவரால் மறுக்க முடியவில்லை. இந்த இக்கட்டிலிருந்து தப்ப வழி என்ன என்று யோசித்தார். கடைசியில் ஒரு வழி அவருக்குத் தோன்றியது. அந்த அதிகாரி சிங்கத்தைப் பார்த்து "சிங்கராஜா, என் மகள் ரொம்பப் பயந்தவள். உன்னுடைய பற்களையும் நகங்களையும் எடுத்துவிட்டால் அவளுக்கு பயம் தெளிந்துவிடும். அப்புறம் கல்யாணம் செய்து தருகிறேன்" என்று கூறினார். சிங்கம் சம்மதித்தது.

அதன் பற்களையும் பிடுங்கி, நகங்களையும் வெட்டினார்கள். அப்புறம் சிங்கம் பலம் இழந்து ஆட்டுக்குட்டி மாதிரி ஆயிற்று. பிறகு அதிகாரி தடியால் அதை அடித்துக் கொன்றார்.

* * *

வேலியைத் தாண்டாதே!

வேட்டை நாய்க்கு பயந்து ஒரு நரி ஓடிவந்து கொண்டிருந்தது. வழியில் வேலி ஒன்று தென்பட்டது. அதைத் தாண்டிக் குதித்தது. வேலிக்கு அப்புறமுள்ள சப்பாத்திப் புதரில் போய் விழுந்தது. சப்பாத்தி முட்கள் அதன் கால்களைக் குத்திக் கிழித்துவிட்டன. கோபமடைந்த நரி கால்களை நக்கிக்கொண்டே அந்த சப்பாத்திப் புதரைச் சபித்தது.

"கோபப்படாதே தம்பி, எல்லையைத் தாண்டுபவர்களைத் தடுப்பது தானே அப்பா என்வேலை? என்மேல் ஆத்திரப்பட்டு என்ன பிரயோசனம்" என்று சப்பாத்திப் புதர் கிண்டல் செய்தது.

பழி ஓரிடம் பாவம் ஓரிடம்!

ஒரு சிறுவன் விளையாடி விளையாடிக் களைத்துப்போனான். அதனால் ஒரு கிணற்றின் ஓரத்தில் படுத்தான்; அப்படியே தூங்கிவிட்டான். அந்த வழியாகப்போன அதிர்ஷ்டம் அவனைப் பார்த்தது. தூங்கும் அந்தச் சிறுவனை எழுப்பியது.

"என் அருமைச் சிறுவனே! கிணற்றோரத்தில் படுத்திருக்கிறாயே; தூக்கத்தில் தவறி விழுந்தால் என்ன ஆவது? கிணற்றுக்குள் விழாமல் உன்னைத் இப்பொழுது நான்தான் காப்பாற்றினேன். நீ கிணற்றுக்குள் விழுந்திருந்தால் எல்லோரும் என்னைத்தான் 'அதிர்ஷ்டம் கெட்டுவிட்டது' என்று குறை கூறுவார்கள். ஆனால் இப்பொழுது நீயே சொல்லு; கிணற்றுக்குள் விழுந்திருந்தால் அது உன் குற்றமா, அல்லது என் குற்றமா?" என்று அந்தச் சிறுவனை அதிர்ஷ்டம் கேட்டது.

* * *

மரத்தின் தவறு

ஒரு நாள் பயங்கரமாகப் புயல் வீசியது. ஆற்றோரமாக இருந்த ஒரு பெரிய தேக்கு மரத்தில் புயல் மோதியது. தேக்கு மரம் வேரோடு சாய்ந்தது. ஆறு அந்த மரத்தை அடித்துக் கொண்டு போய் கரையோரம் ஒதுக்கியது.அங்கிருந்த நாணல்களோ புயலால் பிடுங்கப்படாமல் நின்று கொண்டிருந்தன. இதைப் பார்த்து ஆச்சரியமடைந்த தேக்குமரம், 'நீங்கள் மட்டும் எப்படித் தப்பினீர்கள்?' என்று கேட்டது

அதற்கு நாணல்கள், "புயல் வேகமாக அடிக்கும்போது நாங்கள் வளைந்துகொடுக்கிறோம். எங்களை ஒன்றும் செய்யாமல் எங்களுக்கு மேலாகப் புயல் போய்விடுகிறது. நீ வளைந்து கொடுக்காமல் விறைப்பாக நின்றாய். அதனால் புயலின் வேகம் உன்னைச் சாய்த்துவிட்டது" என்று பதிலளித்தன.

* * *

நரிக்குக்கொண்டாட்டம்....!

துப்பாக்கி குண்டுபட்டு ஒரு மான்குட்டி மாண்டு விட்டது, அதன் உடலுக்காக ஒரு சிங்கமும் புலியும் சண்டைபோட்டன. சிங்கமும், புலியும் இரண்டுமே நல்ல இளமை முறுக்கோடு இருந்தன. அதனால் அவைகளின் சண்டை பலமாகவும் கோரமாகவும் இருந்தது. கடைசியில் இரண்டும் படுகாயமடைந்து கீழே சாய்ந்துவிட்டன. கால்களை அசைக்கக்கூட அவற்றால் முடியவில்லை. அந்த சமயம் அங்கே ஒரு நரி வந்தது. அதற்கு விஷயம் புரிந்து விட்டது. எழுந்திருக்க முடியாமல் கிடந்த சிங்கம் புலியின் கண்களுக்கு முன்பாகவே அந்த மானின் உடலை நரி தூக்கிக் கொண்டு ஓடியது இதைப் பார்த்தது சிங்கம்.

"என்ன முட்டாள்தனம்! நரிக்குக் கொடுப்பதற்காகவா நாம் இப்படிச் சண்டை போட்டோம்" என்று அது புலம்பியது.

பொறுப்பில்லாதவன்

ஒரு கன்றுக் குட்டி பொறுப்பில் லாமல் வேடிக்கை விளை யாட்டுகளில் காலம் கடத்தி வந் தது. வேலை எதுவும் செய்யா மல் தான்தோன்றித் தனமாக அது சுற்றிவந்ததால் நன்ருகக் கொழுத்து வளர்ந்திருந்தது.

ஒருநாள் வயலோரமாக அந் தக் கன்றுக்குட்டி குதித்துக் கும் மாளமிட்டுக் கொண்டிருந்தது. அந்த வயலில் ஒரு காளைமாடு உழுதுகொண்டிருந்தது. அதை பார்த்ததும் கன்றுக் குட்டியால் கேலி செய்யாமல் இருக்கமுடிய வில்லை.

"பாவம், என்ன கேவலமான வேலையைச் செய்கிருய்! கழுத் தில் ஒரு பெரிய நுகத்தடி. பின் ஞல் கலப்பை, இவைகளை இழுத்துக்கொண்டு நாள் பூரா வும் வேலை செய்கிருயே! சுகம் என்ன என்பதே உனக்குத் தெரி யாது; பாவம். என்னைப் பார்! எவ்வளவு சந்தோஷமாக இருக் கிறேன். எங்கு வேண்டுமாளு லும் எப்பொழுது வேண்டுமாளு லும் நான் போகலாம்" என்று கன்றுக்குட்டி பேசியது.

காளைமாடோ இதைக் கேட்டு அசையவே இல்லை. தன் வேலை யை ஒழுங்காகச் செய்துவிட்டு சாயந்திரம் தொழுவத்திற்குத் திரும்பியது. வழியில் அந்தக் கன்றுக்குட்டியை ஒரு கசாப்புக் கடைக்காரன் பிடித்துச் செல் வதைப் பார்த்து இரக்கம்கொண் டது, கன்றுக்குட்டியைப் பார்த்து, "உன் வாழ்வு இனிமை யானதா அல்லது என் வாழ்வு இனிமையானதா என்பது இப் பொழுதாவது புரிந்ததா?" என்று கேட்டது.

* * *

எதிரியின் பலம்

ஒரு கொல்லன் பட்டரையில் பாம்பு ஒன்று நுழைந்தது. அங்கு தின்பதற்கு ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தது. ஒன்றும் அகப்படவில்லை. ஒரு அரத்தைக் கவ்விக் கடிக்க ஆரம் பித்தது. அதைக் கண்ட அரம், "கடி, கடி நன்ருகக் கடி; என்ன தான் உன் பலத்தைக் காட்டினு லும் ஒரு அணுகூட என்னிட மிருந்து கிடைக்காது. எனது தொழிலே எல்லோருடமிருந்து வாங்குவதுதான்; கொடுப்ப தல்ல." என்று கூறிச் சிரித்தது.



வ. ரா. வின் மணிமொழிகள்

காலம் வந்துவிட்டது

சென்றது தூய்மை, நடப்பது கேவலம், நடக்கப்போவது மகா கேவலம் என்று எண்ணுவது ஒரு வகை வைதீக மனப்பான்மை......

இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் எல்லாக் காலங்களுக்கும் தூய்மை பொதுவான சங்கதியாகும். அழகுடனும் ஜீவகளையுடனும் நிலைத்து நிற்பதுதான் தூய்மை கொண்டதாகும். மற்ற யாவும் குட்டிச் சுவர்கள்; அல்லது குட்டைப் பாசிகள்.

'தூய்மை' என்ற பதத்தைப் பிரயோகித்து, 'கிட்ட நெருங்காதே!' என்று நோட்டீஸ் போடுவதைப் போலத் தமிழை அடித்துவிட்டார்கள் தமிழ்ப் பண்டிதர்கள்......

தனித் தமிழ்ப் பண்டிதர்களின் ஆட்சியில் தமிழ் இருந்த காலத்தில், அவர்கள் தமிழுக்காக என்னசெய்தார்கள்? ஒருவருக்கும் அர்த்தமாகாத தமிழை, சுவையும் கவர்ச்சியும் இல்லாத நடையில் எழுதி, குழூஉக் குறியாக அடித்துவிட்டார்கள். அருணசலக் கவிராயர், புகழேந்தி, கோபாலகிருஷ்ண பாரதியார், அண்ணமலை ரெட்டியாரைப் போன்ற உத்தமர்கள் வெள்ளைத் தமிழ் எழுதி தமிழைச் சாகாமல் காத்தார்கள்.....

எழுத்துக்களை மாற்றவோ, கூட்டவோ, குறைக்கவோகூடாதென்றும், தமிழ் எழுத்துக்கள் 'ஓம்' என்ற பிரணவத்திலிருந்து பிறந்தவை என்றும் சொல்லுகிறார்கள். அப்படியானல், அ, இ, உ இந்த மூன்று உயிர் எழுத்துக்களே போதும். 'அ' என்ற எழுத்துமட்டுமே போதும் என்று எனக்குத் தோன்றுகிறது. பஞ்ச காலத்தில் எழுத்துச் செட்டும் நாம் பழகிக் கொள்ளலாம்!......

நன்னூல் சூத்திரங்களை மாற்ற வேண்டியிருக்குமே என்று ரொம்பவும் வருத்தப்படுகிறார்கள். கீழ்க் கோர்ட்டாரின் தீர்ப்பை மாற்ற வேண்டுமே என்று ஹைகோர்ட்டார் கவலைப்பட்டு வருந்துவதேயில்லை

அரசியலும் மதமும் பாஷையும் ஜனநாயக ஆவேசங் கொண்ட பொதுமக்களுக்காகத் தான் இருக்கின்றன. ஒரு கூட்டத்தாரின் நன்மைக்காக, ஒரு கூட்டத்தார் அதிகாரம் செலுத்துவதற்காக, இவை இல்லை......

தமிழ் ஜன சமூகத்தை அடியோடு புதுப்பித்து நிர்மாணம் செய்யவேண்டிய காலமும் தேவையும் வந்துவிட்டன. அந்தப் புதிய நிர்மாணத்துக்கு ஏற்றாற்போல, பாஷையை அமைத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

யார் செய்யும் தடையும் பலிக்காது.

—'மழையும் புயலும்'

* * *

சாஸ்திரம்

பிரமன் உயிரின் தகப்பன்; சரஸ்வதி அறிவின் தாய். ஆகையால், புருஷனுக்குப் படிந்தவள் ஸ்திரீ!...... குபேரனின் சாஸ்திரம் அப்படித்தான் சொல்லுகிறது......

ஆத்மா ஆணுக்கு இருப்பின், பெண்ணுக்கும் உண்டு; பிராமணனுக்கு இருப்பின், பள்ளனுக்கும் உண்டு; மேல்நாட்டானுக்கு இருப்பின் கீழ்நாட்டானுக்கும் உண்டு. சாஸ்திரம் எல்லாம் மனிதனின் அனுபவத்தினின்றும் வளர்கிறது. அதற்கு எல்லை ஒரு நாளும் இல்லை; எல்லை ஏற்படுத்துபவன் முட்டாள் அல்லது அயோக்கியன். இந்த இருவர் நோக்கமும் வெவ்வேறு. முட்டாள் உயிர் வாழவேண்டும்; அயோக்கியன் பிறரை வருத்திக் கஷ்டத்துக்கு உள்ளாக்கி, தன்னைத் தெய்வம் என உயர்த்திக்கொள்ள வேண்டும்.

கருங்கல்லுக்கு இடையே வளரும் ஆலங்கன்று வளர்வதற்குக் கருங்கல் இடம் கொடுப்பதில்லை; மன்றுடியும் பயன்படுவதில்லை. ஆலங்கன்றின் உயிர், தன் சாவு என்று நினைக்கிறது கருங்கல்.

—'சுந்தரி'.

* *

புத்தரின் தத்துவம்

ஆனபதிராயன் சொல்லுகிறன்:

"புத்தன் வாழ்க்கையின் தோணியைக் காணவில்லை; வாழ்க்கைச் சக்கரத்தின் மையப் புள்ளியைத் தரவில்லை. அருங்குணங்கள் அருஞ்செயல்கள் என்ற அலைகடலில் புத்தன் மிதந்து கிடந்தான். வாழ்க்கைச் சமுத்திரத்தின் தோணியான ஆத்ம சொரூபத்தைக் காணவில்லை. எனவே, உன் முன்னோர்களின் வாழ்க்கை நங்கூரமிழந்த கப்பலைப்போலாயிற்று.

"பொன்னை ஆபரணமாகச் செய்ய நினைத்தால், அதைப் பொடி வைத்து ஊதவேண்டும். அதுபோல நற்குணங்களை அணிந்துகொள்ள எத்தனிப்பவன், அந்தக் குணங்களுக்கிடையே ஒரு பொடி வைக்க வேண்டும். குணங்களுக்கிடையே ஓடுவதுதான் ஆத்ம தத்துவம். புத்தன் நற்குண மாலையைத் தொடுக்கப் பார்த்தான். தனித் தனிக் குண மலர்களைக் கண்டதல்லால், மாலையைக் காணவில்லை......

"புத்தனின் தனிக்குணங்கள் வாழ்க்கையைச் சூன்யமாக்கிவிட்டன. வாழ்க்கைக்குப் பிடிப்பில்லாமல் போய்விட்டது. புத்தனின் தத்துவம் அராஜக தத்துவம்; நாயகனில்லாத மாளிகை; கண் திறக்காத சித்திரம்; நீரோட்டமில்லாத வைரம்; ஒலியில்லாத நாணயம். புத்தனின் அருங்குணங்கள் இந்த

நாட்டுக்குப் பெரும் சுமையாய்ப் போயின."

—'புண்யமும் பலவீனமும்'

* * *

சீர்திருத்தவாதிகளின் போக்கு

பூனையின் கழுத்தில் மணியைக் கட்டுவதில் எல்லா எலிகளுக்கும் சம்மதந்தான்; ஆசையுங்கூட. ஆனால், பூனையின் கழுத்தில் எந்த எலி மணியைக் கட்டுவது என்பதுதான் கேள்வி. மற்ற எலிகள் அதைச் செய்வதில் ஒவ்வோர் எலிக்கும் பரிபூர்ண சம்மதம்; அதில் சந்தேகமில்லை. பூனையின் கழுத்தில் மணியைக் கட்டினால் எலி சமாஜத்துக்கு ஆபத்துக் குறைந்து, தாங்கள் க்ஷேமமாய் வாழ முடியும் என்று அத்தனை எலிகளுக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் காரியம் செய்வது யார் என்பதிலேதான் அவைகளுக்குள் அபிப்பிராய பேதம். பேச்சளவில்தான் நாராயண ஐயரும் அவர் போன்றவர்களும் சீர்திருத்தக்காரர்கள். அயலார் தியாகம் செய்ய, அதிலிருந்து உண்டாகும் நன்மைகளையும் லாபங்களையும் அனுபவிக்க, ஒருவரும் பின்வாங்க மாட்டார்கள். ஆனால், தியாகம் செய்வதற்கோ, யாரும் தயங்காமல் முன் வருவதில்லை. 'ஊரான் வீட்டு நெய்யே, பெண்டாட்டி கையே' என்ற பழமொழியில் அடங்கிப்போயிருக்கிறது வாழ்க்கைத் தத்துவம்.

—'சின்னச்சாம்பு'

* * *

தரகுத் தொழில்

மாட்டுத் தரகு மாணிக்கம் சொல்லுவார்: "தரகுத் தொழிலே ரொம்பத் தொல்லை பிடித்த தொழிலுங்க. கோர்ட்டிலே தீர்ப்பை இரண்டு கட்சியும் ஒப்புக்கிருங்களா? அந்த மாதிரிதான் தரகன் தீர்ப்பும். வந்த மாடுகளை விலை பேசி வாங்கலாம்; அல்லது விக்கலாம். வாங்குகிறவங்க மனசுக்குப் பிடித்தமாதிரி, மாட்டை உண்டாக்க முடியுமுங்களா? மந்தையிலே நல்ல மாடும் இருக்கும்; பழுதான லங்கடாவும் இருக்கும். நல்ல மாட்டை விக்க, மாணிக்கத்தின் தயவு யாருக்கும் வேண்டாம்; லங்கடாவை வித்துக் கொடுக்கிறதுக்குத்தான் மாணிக்கம் வேணும். அப்படியானல், மாணிக்கத்துக்கு எப்படி நல்ல பெயர் கிடைக்கும்?"

—'வாழ்க்கை விநோதங்கள்'

* * *

ஸ்தோத்திர சூட்சுமம்

குண்டு மல்லிகையைப் பார்த்திருக்கிறீர்களா? அதைப் போலவே இருப்பார் குண்டுப் பிள்ளையும்; ஆனல், வாசனை வீசமாட்டார். அவர், பனம் பழம் உருளைக் கிழங்கு இவைகளைப்போல இருக்கிருர் என்று நான் சொல்லியிருக்கலாம். இந்த உவமைகளைத் தமிழ்ப் புலவர்கள் கேட்டால், மனம் நொந்து போவார்களே என்று பயந்து மல்லிகையைப் பிடித்துக் கொண்டேன்.

ஸ்தோத்திரம் என்பது இல்லாத ஒன்றை உயர்வாகச் சொல்லுவது என்று வழக்கமாகிவிட்டது. எப்பொழுது ஸ்தோத்திரத்துக்குத் துவக்கியாயிற்றோ, ஏன் குறைச்சலாகப் புகழவேண்டும்? உள்ளதை மறைத்தும் மறந்தும், புகழுக்கும் புழுகுக்கும் கொடியேற்றித் திருவிழாச் செய்ய ஆரம்பித்த காலம் முதல் நம்மைப் புலவர்கள் கெடுத்துவிட்டார்கள் என்றால், அவர்களுக்குக் கோபம் வரும். அவர்கள் பொல்லாப்பு நமக்கு எதற்கு?

ஒருவன் வாட்டசாட்டமாய் இருக்கிறான் என்று வர்ணிப்பது அழகு என்பது ஒரு சம்பிரதாயம். அட்டைக்கருப்பை நீல மேக சியாமள வர்ணம் என்று நீட்டி முழக்கிப் பேசினால்தான், நாக்கில் ருசி தட்டுகிறது. வால்மீகியும் வியாசரும் முழுக் கறுப்பை எவ்வளவோ உயர்த்திப் பேசினாலும், இப்பொழுது 'துரைமாதிரி பிறந்திருக்கிறது' என்றே ஸ்திரீகள் சொல்லுகிறார்கள்; 'கருப்புப் பெண் வேண்டாம்' என்று ஆண்பிள்ளைகள் துடிதுடிக்கிறார்கள்.

'வாட்டசாட்டத்திலே' அழகு இருப்பது உண்மைதான். ஆனால் கெட்டிக்குட்டையில் அழகு இல்லையா? வலிமை இல்லையா?

—'வாழ்க்கைச் சித்திரம்'

* * *

யாருக்காகக் கலைகள்?

படித்தவர்கள் கலைகளை ரசிக்கும் வகை வேறு; பாமரர் ரசிக்கும் வகை வேறு. படித்தவர்கள், ரஸிகர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள், சங்கீதத்திலே ஆலாபனையைப் புகழ்வார்கள்; அதற்குச் சுத்த சங்கீதம் என்று பெயராம். அவர்கள் ஸ்வரத்தைப் போற்றுவார்கள். பாமரர்களோ தங்களுக்கு அர்த்தமாகிற சாகித்தியப் பாட்டுக்களைத்தான் ரசிக்க முடியும். —'கலையும் கலைவளர்ச்சியும்'

கன்னட கிராமிய சங்கீதம்

★

"ரஸிகன்"

கன்னட கிராமிய சங்கீதத்தில் மக்களின் சமூக, கலாசார, அரசியல் வரலாற்றையும் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் அம்சங்கள் நிறைந்து இருக்கும். கன்னட கிராமியப் பாடல்கள் ஜீவனும், சந்தமும் பொருந்தியவை; ஆத்மீக உணர்ச்சி அவைகளில் ததும்பி நிற்கும். கன்னட கிராமியப் பாடல்கள் எத்தனையோ வகைப்பட்டவை. அவைகளில் பெரும்பாலானவை புராணக் கதைகளையும், தெய்வீக வரலாறுகளையும் விஷயமாகக் கொண்டிருக்கும். சாமானிய வாழ்க்கைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட பாடல்களும் பல இருக்கின்றன.

தத்துவ, கம்சளே பத, மந்தே தேவார பத, பீசுவ பத, யேத்ததா ஹடு, லாவணி, காடி பத, லாலி, கோலாட்டா, திரிபாடி, சௌபாடி, சுக்கி குனிதா முதலிய பல வகையான நாட்டுப் பாடல்களும் யக்ஷகான என்னும் நடன நாட்டியமும் கிராமிய சங்கீதத்தின் முக்கிய அம்சங்களாகும். கிராமியப் பாடல்களை ஒருவர் தனித்தோ அல்லது இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்தோ பாடுவார்கள். பாடல்களுக்குப் பக்க வாத்தியமாக ஏக நாடா அல்லது ஏக தாரா என்னும் ஒற்றைத் தந்தி வாத்தியமும், சிக்க வீணையும் (நாலு தந்தியுள்ள சிறிய வீணை), கக்காரா, கஞ்சீரா போன்ற தாள வாத்தியங்களும் உபயோகிக்கப்படும்.

இக்கிராமிய சங்கீதங்கள் கன்னட மக்களின் இயல்பான பண்பை எடுத்துக் காட்டுபவையாக இருக்கும். இப்பாடல்கள் சாமானிய மொழியில், அதிக அலங்காரங்கள் இல்லாமல் தான் இருக்கும். ஆனால், சில பாடல்கள் இலக்கியத்துக்கு அணிசெய்கிறபடி மிக்க அழகும் பொருளும் அடங்கியவையாகவும் இருக்கும். இப்பாடல்களில் கம்சளே பத, மந்தே தேவரா பத ஆகியவை தெய்வ சம்பந்தமான விஷயங்கள் பற்றியவை. பீசிவ் பத என்னும் பாடல்கள் அதிகாலையில் பெண்கள் திரிகை திரிக்கும்போது பாடுவது. ஏத்ததா ஹாடு என்பது ஏற்றப்பாட்டு. லாவணிகள் பெரும்பாலும் வரலாற்றுப் பாடல்கள். லாவணி பாடுபவர்கள் இரு பிரிவினர். ஒரு தரப்பார் சக்தியையும், மற்றவர்கள் "புருஷனையும்" (இறைவனையும்) பற்றிப் பாடுவார்கள்.

லம்பாணி, சோலிகார் ஆகிய பூர்வ குடிகளின் பாட்டுக்கள் மிகவும் இனிமையான கிராமியப் பாடல்களாகும். இவைகளில் குஜராத், ராஜஸ்தான், உத்தர

பிரதேச சங்கீதச் சாயலைக் காண லாம். சோலிகார்களின் பாடல்களில் சோகம் தொனிக்கும். சோலிகார்கள் காட்டுக் குடிகள். அவர்களின் இயல்பான வாழ்க்கைப் பிரதேசங்கள் படிப்படியாய் அழிந்து வருகின்றன. அவர்கள் வாழ்க்கையும் கஷ்டமான வாழ்க்கை. வாழ்க்கையின் சிரமமும் சோகமும் சங்கீதத்திலும் தொனிக்கும்.

குடகு மக்களின் கிராமிய சங்கீதம் அம்மக்களின் தெம்பையும், உறுதியையும், எடுத்துக்காட்டும். குடகு நாட்டுப்பாடல்கள் சாதாரணமாக ஆட்டத்தோடு இசைந்து பாடப்படும். "தேவ" அல்லது சிவனைத் தொழுகிற பாடல்களே அதிகமாக இருக்கும். "காவேரி மாதா" தான் குடகு மக்களின் இஷ்ட தேவதை. காவேரி மாதாவைப் போற்றும் பாடல்களும் ஏராளமாக உள்ளன. கோலாட்டா, வாள் நடனம், அறுவடை நடனம் முதலிய பல நடனங்களை ஆடும்போது இப்பாடல்கள் பாடப்படும்.

"யக்ஷகான" நடன நாட்டியம், கன்னட மக்களின் கிராமிய வாழ்க்கையின் முக்கிய அம்சம். இந்திய கிராமக் கலைக்கு கன்னட மக்கள் தந்துள்ள செல்வம் அது. நாடக மேடையும், திரையும், ஜோடனையும் இல்லாமல், திறந்த வெளியில் நடக்கும் கிராமிய நாடகம் அது. அதில் பாட்டும் கூத்தும் இரு அம்சங்கள்; கதையை விளக்கும் வசனமும் கூடவே நடக்கும். ஆண்கள் மாத்திரமே இதில் பங்கெடுப்பார்கள். உடைவேஷம் இதில் முக்கியமாக வற்புறுத்தப்படும். ராமாயணமும் மகா பாரதமும்தான் இந்நாடகங்களுக்கு விஷயமாக இருக்கும். இரவில் நடத்தப்படுகிற இந்நாடகங்கள் அதிகாலை வரை நடக்கும்.

காடி பத என்பது, வண்டிப் பாட்டு. வெகு தூரம் பார வண்டிகளில் செல்லும் வண்டிக்காரர்கள் தங்கள் தனிமையின் முடிவைக் குறைப்பதற்கும், பிரயாண சிரமத்தைக் குறைப்பதற்கும் இப் பாட்டுக்களைப் பாடுகிறார்கள். அருமைக் குழந்தையை அன்போடு தாலாட்டும் பாடல்களே "லாலி" பாடல்கள். அறுவடைக் காலத்தில் வயல்களிலுள்ள தொழிலாளர்கள் பாடுவது "கோலாட்டா". "சுக்கி குனிதா" என்னும் அறுவடை நடனங்களை ஆடும், உழவரும் உழத்தியரும் சுவைபடப் பாடுவதே கோலாட்டா. இப்பாடல்களின் வகைகளும், மெட்டுகளும், சந்தங்களும் கன்னட கிராமியப் பாடல்களின் சிறப்பை எடுத்துக் காட்டும். தசராவின் போது சாமுண்டி தேவியின் புகழைப் பாடும் திரிபாடி, தௌபாடி பாடல்கள் பக்திப் பாடல்கள்.

கன்னட கிராமியப் பாடல்கள் பெரும்பாலும். சாமா, யதுகுல காம்போதி, ஆனந்த பைரவி, நவ்ரோஸ், மோஹனம், முஹாரி, சௌராஷ்டிரம், சங்கராபரணம், நாதநாமக் கிரியை ஆகிய ராகங்களில் பாடப்படுகின்றன. ●

பொறுக்கு மணிகள்

★

— சிற்றெறும்பு —

★

காந்தி வழி

காந்தியடிகள் ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு வைத்துக்கொள்ளுவார். சின்ன விஷயங்களிலும் செட்டாகஇருப்பார். மற்றவர்களும் அப்படியே இருக்க வேண்டுமென்று கண்டிப்பாக இருப்பார்.

கடிதங்களில் குத்தப்பட்டிருக்கும் குண்டூசியைக்கூடத் தனியாக எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளுவார். இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்குக் காந்தியடிகள் சென்றபோது நடந்த சம்பவம் இது. காந்தியடிகள் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். கப்பலில் ஒரு வெள்ளைக்காரன் தினந்தோறும் காந்தியடிகளிடம் வருவான். ஒருநாள் அவன் அவரைப்பற்றிக் கேலிக் கவிதைகளை எழுதி, அவரிடம் எடுத்து வந்தான்.

அவைகளை அவரிடம் கொடுத்தான். அதை வாங்கிய காந்தியடிகள் அவைகளைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டு விட்டார். கிழிப்பதற்கு முன்னர் அதில் குத்தப்பட்டிருந்த குண்டூசியை மட்டும் எடுத்து ஒரு டப்பியில் பத்திரப் படுத்திவைத்துக்கொண்டார்.

அந்த வெள்ளைக்காரன் "மிஸ்டர் காந்தி, அதைப் படித்துப்பாரேன். அதில் சாரமொன்றுமில்லையா?" என்றான்.

"ஆமாம், இருந்த சாரத்தைத் தான் டப்பிக்குள் வைத்துவிட்டேனே!" என்று காந்தியடிகள் பதிலளித்தார். இதைக் கேட்டு கூடியிருந்த எல்லோரும் சிரித்தனர். அந்த வெள்ளைக்காரன் வெட்கித் தலைகுனிந்தான்.

* * *

வைக்கோல் மருந்து

சென்ற நூற்றாண்டின் இறுதியில் வங்காளத்தில் காளிசரண் லாஹிரி என்ற பிரபல வைத்தியர் ஒருவர் இருந்தார். அவர் கருணை மூர்த்தி; தீனதயாளு. ஏழைகளுக்கெல்லாம் இலவசமாக வைத்தியம் செய்வார்.

ஒருமுறை ஒருஏழைக்கு அவர் எழுதிக்கொடுத்த இலவச மருந்துச் சீட்டு, அவருடைய மருத்துவச் சாலையில் இருந்த எல்லோரையும் தீணறடித்தது. மருந்து கொடுக்கும் கம்பவுண்டர்அதைப்

படித்துப் பார்த்தபோது, அதில் மருந்துகளின் பெயர்களுக்குக் கீழே 'ஒரு வண்டி வைக்கோல்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது என்ன புது தினுசான மருந்தாக இருக்கிறதே என்று அவருக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அவரும் பிற ஊழியர்களும் இதைப்பற்றி ஒருவருக்கொருவர் சொல்லி அதிசயமடைந்து, ஒன்றும் புரியாமல், டாக்டர் லாஹிரியிடமே சென்று "இதென்ன இப்படி எழுதியிருக்கிறீர்களே! ஞாபகப் பிசகாகவா ?" என்று கேட்டார்கள்.

"ஒரு பிசகுமில்லை. உண்மையாகவே மருந்தோடு ஒரு வண்டி வைக்கோலும் அவனுக்கு அளிக்க வேண்டும் என்றுதான் நான் எழுதினேன்" என்றார் டாக்டர் லாஹிரி.

அதன் காரணத்தைக் கேட்டபோது, அவர் "அவனது வீட்டுக்கு நான் வைத்தியம் பார்க்கச் சென்றபோது, அந்த ஏழையின் குடிசை ஒழுகிக்கொண்டிருப்பதைக் கண்டேன். மருந்து மட்டும் தின்றால் அவன் பிழைக்க மாட்டான். அதற்காகத் தான், அவன் வீட்டுக் கூரையை வேய்வதற்கு ஒரு வண்டி வைக்கோலும் அனுப்பவேண்டும் என்று எழுதினேன்" என்று விளக்கினார்.

* * *

குறும்புக்கார மாணவன்

பச்சையப்பன் கல்லூரியில் முதல் பிரின்ஸிபாலாக இருந்தவர் மிஸ்டர் லவரி என்பவர். மாணவர்களுக்கு அவர் ஒரு நாள் வகுப்பு எடுத்துக்கொண்டிருந்தார். மாணவர்களில் ஒருவன் படிப்பைவிட விஷமம் செய்வதில் பிரியம் கொண்டவன். லவரி பாடம் சொல்லிக்கொண்டிருக்கையில் அவன் பாடத்தைக் கவனிக்காமல் எங்கேயோ பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

பிரின்சிபாலுக்குக் கோபம் வந்து, "ஏ முட்டாளே! என் பாடத்தைக் கவனிக்காமல் மேலே என்ன பார்க்கிறாய்? என்று கத்தினார்.

அந்த மாணவன் "ஸார், உங்கள் பாடம் ரொம்ப ருசியாக இருக்கிறது. அந்த ருசியைப் பருகும் ஆசையால், அந்தப் பல்லிகூடக் கீழே வர வெகு நாழியாக முயற்சித்தும் முடியாமல் தவித்து, தலையை மேலே தூக்குகிறது. அதைப்பார்த்துத் தான் அதிசயப்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

எல்லா மாணவர்களும் 'கலீர்' என்று சிரித்தார்கள். பாவம்! பிரின்சிபால் என்ன செய்வார்? அவரும் அந்தச் சிரிப்பில் சேர்ந்து கொண்டார்.

* * *

விளம்பரமில்லா தவியாபாரம்

ஒரு தென்னாப்பிரிக்கப் பத்திரிகையில் இப்படி ஒரு அறிவிப்பு வெளியாயிற்று.

"விளம்பரம் செய்யாமல் வியாபாரம் நடத்துவது, இருட்டிலே ஒரு பெண்ணைப் பார்த்

துச் கண்ணைச் சிமிட்டுவதைக் போலத்தான், நீங்கள் புரியும் அலுவல் உங்களுக்குத் தான் தெரியும் ; வேறு யாருக்கும் தெரியாது ”

* * *

கழுதையும் குதிரையும்

உலகப் புகழ் பெற்ற பிரெஞ்சுக் கதாசிரியரான அலெக்ஸாந்தர் டூமாஸ் என்பவருக்கு, ஊர் பேர் தெரியாத சாதாரண நாடகாசிரியன் ஒருவனிடமிருந்து ஒரு நாள் ஒரு கடிதம் வந்தது.

தான் ஒரு நாடகம் எழுதத் திட்டமிட்டிருப்பதாகவும், அதை டூமாஸ் அவர்களோடு சேர்ந்து கூட்டாக எழுத, தான் விரும்புவதாகவும், டூமாஸின் சம்மதத்தைத் தெரிவிக்கும்படியும் எழுதியிருந்தான்.

டூமாஸுக்குக் கோபம் வந்தது. அநாமதெயமான ஒரு ஆசாமி, பேரும் புகழும் பெற்ற தமக்குக் கூட்டாளியாவதா ?

“எப்படி ஐயா, கழுதையையும், குதிரையையும் ஒரே வண்டியில் பூட்டலாம் என்ற துணிச்சல் வந்தது ?” என்று அந்த நாடகாசிரியருக்கு டூமாஸ் பதில் எழுதினர்.

அவனும் விடவில்லை. உடனே, “எப்படி ஐயா, என்னைக் குதிரை என்று சொல்ல உமக்குத் துணிச்சல் வந்தது ?” என்று கேட்டு டூமாஸுக்கு அவன் எழுதினன்.

இதைப் படித்ததும் டூமாஸின் கோப மெல்லாம் தணிந்தது. ரொம்ப சந்தோஷப்பட்டார். “உமது நாடகத்தின் கையெடுத்துப் பிரதியை, என் அருமைத் தோழனே உடனே அனுப்பி வையும்” என்று அவனுக்குப் பதிலும் போட்டார்.

* * *

பாதிரியின் நரகம்

ஒரு பாதிரியார் 'நரகம் உண்டா?' என்ற விஷயம் பற்றிப் பிரசங்கம் செய்தார்.

பாதிரியார் : சகோதரர்களே ! உலகத்தைக் கர்த்தர் ஒரு பந்து போல உருண்டையாகப் படைத்தார்.

சபையோர் : ஆமென்

“அந்த உலகம் சுழல்வதற்காக, வட துருவத்திலும் தென் துருவத்திலும் இரண்டு அச்சுக்களை அமைத்தார் ”

“ ஆமென் ”

“ அந்த அச்சுக்கள் தேய்ந்து சூடாகாமல் ஒழுங்காக வேலை செய்வதற்காகப் பூமியின் வயிற்றிலே ஏராளமான எண்ணெயை ஆண்டவன் ஊற்றி வைத்தார். அதன் பின்பு, ஏராளமான பாவிகள் டெக்ஸாஸ், ஓக்லஹாமா, கலிபோர்னியா, பென்ஸில்வேனியா, மெக்ஸிகோ, அரேபியா; ருஷ்யா ஆகிய இடங்களில் கிணறுகள் வெட்டி, கர்த்தரின் எண்ணெயைத் திருடி வருகிறார்கள்.

“ ஆமென் ”

"ஒரு நாள், சகோதர சகோதரிகளே, கடவுளின் எண்ணெய் பூராவும் காலியாகி விடப் போகிறது அப்போது உலகம் நாசமாகப் போகிறது. அது தான் நரகம், சகோதரர்களே அது தான் நரகம்."

* * *

முன் ஜாக்கிரதை

ஒரு நாயர், ஒரு கடைக்குள் நுழைந்தான். கொஞ்சம் டெலிபோன் பேச அனுமதி கேட்டான். அவன் பேசிய விவரமாவது.

"ஹலோ! ராமசாமி செட்டியார் வீடா அது?... சரி, பேசறது ஒரு நாயரு. எனக்குச் சமையல் நல்லாத் தெரியுமுங்க. உங்களுக்கு ஒரு சமையல்காரன் தேவையா?... உங்ககிட்ட இருக்கானு, ஆனு... புது ஆள் தேவையில்லையா?... இருக்கிற ஆள் கிட்ட ரொம்பத் திருப்தியா?... நிச்சயமாகவா?... சரிதாங்க நமஸ்காரமுங்க"

இப்படி அவன் பேசி முடித்ததும், கடைக்காரர் இரக்கம் கொண்டு, "எனக்குக் கூட ஒரு சமையல்காரன் வேணுமப்பா! இஷ்டமானல், என்னிடமே வேலைக்குச் சேர்ந்துக்கோ" என்ருர்.

"ரொம்ப சந்தோஷமுங்க வேண்டாமுங்க; எனக்கு வேலை தேவையில்லை." என்ருன் அந்த நாயர்.

ஆச்சரியமடைந்த கடைக்காரர், "என்னப்பா, இப்பத்தானே வேலை வேண்டுமென்று யாரையோ கேட்டாயே!" என்ருர்.

"அதுங்களா? நான் அவர் கிட்டத் தானுங்க வேலைக் இருக்கிறேன். அவருக்கு என்மேலே திருப்தியிருக்குதான்னு பார்க்க இப்படி அடிக்கடி டெலிபோனில் விசாரிச்சுக்குவேனுங்க" என்ருன் அந்த நாயர்.

* * *

சூடான பதில்

ஸர் அஸுடோஷ் முகர்ஜி என்ற பிரபல ஹைகோர்ட் ஜட்ஜ் தம் தாயாரிடம் பெரும் பக்தி உடையவர். ஏதோ ஒரு விசேஷத்துக்கு வருமாறு வைஸிராய் அழைத்தார். தன் தாயின் மத நம்பிக்கைக்கு அது விரோதமாகையால், தாம் வர முடியாது என்று முகர்ஜி தெரிவித்தார்.

வைஸிராய்க்குக் கோபம் வந்துவிட்டது. எரிச்சலுடன், அவள் மகன் வரவேண்டுமென்று வைஸிராய்கட்டளையிட்டிருக்கிருர் என்று உம் தாயிடம் சொல்லும்! என்ருர் வைஸிராய்.

இதைக் கேட்டது தான் தாமதம். முகர்ஜி எரிமலை எனக் குமுறினுர். "அப்படியானல், என் தாயின் சார்பாக வைஸிராய்அவர்களுக்கு நான்ஒருவிஷயம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதாவது: என் தாய் தன்னைத் தவிர வேறு யாறும் அவர் வைஸிராயாக இருந்தாலும் சரி; அவரைவிடப் பெரிய

வேறு எவராக இருந்தாலும் சரிதான்—தன் மகனுக்குக் கட்டளையிடுவதை வெறுக்கிறார்" என்று சுடச்சுட முகர்ஜி பதிலளித்தார்.

* * *

எது பெரியது?

ஒரு படையில் இருந்த வீரர்கள் எல்லோரும் ஏற்கனவேயே மிக அதிகமாக ரஜா எடுத்துக் கொண்டு விட்டார்கள். இப்படியிருக்கும் போது ஒரு சிப்பாய் தனக்கு ரஜா வேண்டுமென்று கேட்டான். "வீட்டிலே என் மனைவிக்கு என் துணை தேவையாக இருக்கிறது. ஆகவே ரஜா வேண்டும்" என்று சொல்லி நச்சரித்தான்.

அதிகாரிக்கு இவனது தொல்லை சகிக்க முடியவில்லை. அவருக்கு எரிச்சல் எரிச்சலாக வநதது.

" இந்தாப்பா உன்னுடைய நாட்டுக்குச் செய்யவேண்டிய கடமையை விட உன் மனைவியையே பெரிதாக நினைக்கிறாயா ?" என்று கேட்டார்.

சிப்பாய் உடனே, "என் நாட்டைக் காக்க ஒரு கோடியே பத்து லட்சம் பேர் இருக்கிறார்கள். ஆனால் என் மனைவிக்கோ நான் ஒருவன் தானே இருக்கிறேன்" என்றான்.

சிப்பாய்க்கு உடனே ரஜா கிடைத்தது.

* * *

அவசர சிருஷ்டி

"ஸார், உங்கள் கோட்டைத் தைக்க நான் எடுத்துக் கொள்ளுவதில் ஆட்சேபனையில்லை. ஆனால் முடிக்க முப்பது நாளாவது ஆகும்! சம்மதமா?" என்றான் வேலை செய்து களைத்திருந்த தையல்காரன்.

வாடிக்கைக்காரர் : முப்பது நாளா ? என்னப்பா உலகமே ஆறே ஆறு நாளில் சிருஷ்டிக்கப்பட்டு விட்டதாமே அப்பா ?

தையல்காரன் : வாஸ்தவம் தான். ஆனால் அது இப்போ எப்படி இருக்கிறது பார்த்தீர்களா ?



பாட்டு

—பாரதி—

ரஸ ஞானமில்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் ஸங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்து ஸங்கீத வித்வான்களிலே பலர் ஸங்கீதத்துக்கு நவ ரஸங்களே உயிர் என்ற செய்தியை அறியாதவர்கள்.

முத்துசாமி தீக்ஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை, அதிக 'ஸங்கதி'களுடன் பாடுவோரே 'முதல்தர வித்வான்கள்.' இந்தக் கீர்த்தனங்களெல்லாம் ஸம்ஸ்க்ருதம் அல்லது தெலுங்கு பாஷையிலிருக்கின்றன. ஆகவே, முக்காலே மும்மாகாணி 'வித்வான்'களுக்கு அந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலைசெய்தும் விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவர்களுக்கு 'ரஸம்' தெரிய நியாயமில்லை.

* * *

நானும் பிறந்தது முதலாக இன்று வரை பார்த்துக்கொண்டு வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராம நீ ஸமான மெவரு', 'மரியாத காதுரா', 'வரமுலொஸதி'...... ஐயையோ, ஐயையோ ஒரே கதை.

"எந்த 'வித்வான்' வந்தாலும் இதே கதைதான். தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால் திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக் கணக்காகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தோற்காதுள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள்."

* * *

"வித்வான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால் தமிழ் சபைகளிலே எப்போதும் அர்த்தந்தெரியாத பிற பாஷைகளில் பழம் பாட்டுக்களை மீட்டு மீட்டும் சொல்லுதல் நியாயமில்லை. அதனால் நமது ஜாதி சங்கீத ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்"

—'பாரதி தமிழ்'



லெனினின் தீர்ப்பு

சோவியத் ருஷ்யாவை ஸ்தாபித்த மாமேதை லெனினை யாரோ ஒரு பாதகன் சுட்டதால் படுகாயம் ஏற்பட்டது. நாடெங்கிலுமிருந்து டாக்டர்கள் ஓடிவந்தார்கள். மிக மிக அபூர்வமான சில மருந்துகளைக் குறிப்பிட்டு, அவைகளை லெனின் உபயோகிக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த லெனின், மிக்க அமைதியாக டாக்டர்களை ஒரு சந்தேகம் கேட்டார் "இந்த மருந்துகள் எல்லாம், நமது நாட்டின் சாதாரண ஒரு ஏழைப் பிரஜைக்குக் கிடைக்குமா ?" என்று வினவினார்.

டாக்டர்கள் புன்முறுவலுடன், "இல்லை. இவை ஏழைகளுக்குக் கிடைக்கக்கூடிய மருந்தல்ல. தங்களைப் போன்ற மிகப் பெரிய மனிதர்களுக்கு மட்டுமே கிடைக்கும்" என்றார்கள்.

லெனின் ஆத்திரமடைந்தார். புரட்சி இன்னும் வேறூன்றவில்லையா என்றேங்கினார். 'அப்படியானால், எனக்கும் இந்த மருந்துகள் வேண்டாம்" என்று கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

டாக்டர்கள் திகைத்தார்கள். லெனின் உயிர் பிழைப்பதரிது என்று வருந்தினார்கள். லெனினின் மனைவி குருப்ஸ்கயாவிடம், கட்சித் தலைவர்கள் பலர் சென்றார்கள் "அந்த மருந்துகளை எப்படியாவது லெனின் உபயோகிக்கும்படி செய்ய வேண்டும் என்று மன்றாடினார்கள்.

அந்த அம்மையாருக்கு ஒரு யுக்தி தோன்றியது. டாக்டர்களை அழைத்து, அந்த மருந்துகளை பிஸ்கோத்துக்குள் வைத்துத் தரும்படி சொன்னார். அந்த பிஸ்கோத்துக்களை லெனினுக்கு கொடுத்து வந்தார். லெனின் வர வரக் குணமடைந்து வந்தார்.

"பார்த்தாயா! அந்த உயர்ந்த மருந்துகளை உட்கொள்ளா விட்டால், நான் பிழைக்க மாட்டேன் என்று, டாக்டர்களும் நீயும் எண்ணிணீர்களே? என் மன உறுதியால் நான் குணமாகி வருகிறேன், பார்" என்று லெனின் அடிக்கடி தன் மனைவியிடம் பெருமையடித்துக் கொண்டார். பல முறை இது கேட்டும் பேசாதிருந்த குருப்ஸ்காயாவுக்கு ஒரு நாள் பொறுமை குன்றியது; 'ஆமாம் குணமாக மாட்டீர்களோ, பிஸ்கோத்துக்குள் மருந்தை வைத்து ஓயாமல் கொடுத்து வந்தால்?" என்று உண்மையைக் கூறிவிட்டார்.

லெனின் திடுக்கிட்டார். அளவற்ற ஆத்திரம் கொண்டார். உடனே பேனாவும் காகிதமும் எடுத்தார். தம் மனைவி குருப்ஸ்கயா, தலைவர் உத்திரவை வேண்டுமென்றே மீறி, புரட்சிக்குத் துரோகம் செய்து விட்டதாகக் குற்றம் சுமத்தி, அவளை விசாரிக்கும்படி நீதிபதிகளுக்கு உத்திரவிட்டார். எவர் கெஞ்சியும் உத்திரவை லெனின் மாற்றவில்லை; பிடிவாதமாய் நின்றார்.

நீதிபதிகளும் விசாரித்தார்கள். குருப்ஸ்கயா குற்றவாளி தான் என்று அவர்கள் முடிவும் சொன்னார்கள். ஆனால், அவர் சோவியத் அரசாங்கத்துக்கு, அதன் மூலம் அருஞ்சேவை புரிந்ததால், அவருக்கு மன்னிப்பளிப்பதாயும் உத்திரவிட்டுப் புகழ்மாலையுடன் அவரை விடுவித்து விட்டார்கள். ●